10TH AUGUST 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 85 | பக்கங்கள் - 15 | editor.uthayam@gmail.com

## பலஸ்தீனை ஆதரித்து கொழும்பில் 15ம் திகதி பாரிய ஆர்ப்பாட்டம்

பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாகவும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பினை எதிர்த்தும் எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பில் பிரமாண்டமான ஊர்வலமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பலஸ்தீன் ஆதரவு அமைப்புகள் ஒன்றிணைந்து

02ம் பக்கம்பார்க்க...

# முஸ்லிம் முதலமைச்சரே கிழக்கை ஆள வேண்டும்

## சகலரையும் இணைத்து கூட்டணி அமைக்கவும் திட்டம்

## சபாத் இல்லத்தை மூடவும் நடவடிக்கை எடுக்கவும்

### ஐக்கிய சமாதான கூட்டமைப்பு வலியுறுத்தல்

(எஸ்.அஷ்ரப்கான்)

இலங்கையின் எதிர்காலத்திற்கு அச்சுறுத்தலாக மாறிவரும் சட்டவிரோத சபாத் இல்லங்களை பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

கல்முனை மயோன் பிளாஸா மண்டபத்தில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பால், இன்று (09) மாலை ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இக்கருத்து முன்வைக்கப்பட்டது.

02ம் பக்கம்பார்க்க...



## அதுரலியே ரத்ன தேரரைத் தேடி பொலிஸார் வலைவிரிப்பு

### தென் பகுதிகளில் ஒளிந்திருக்கலாமென சந்தேகம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்தன தேரரை கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் தற்போது தேடி வருகின்றனர்.

கொழும்பு

02ம் பக்கம்பார்க்க...

## இஸ்ரேலின் தன்னிச்சையான முடிவு பேரழிவைத் தரக் கூடும்

### சஜித் பிரேமதாச கவலை



பாலஸ்தீனத்திற்கும், இஸ்ரேலுக்கும் இடையில் யாருடைய வரலாறு அதிக எடை கொண்டது என்பது பற்றிய விவாதம் இனி இல்லை.

இது ஒரு மனித பேரழிவாக மாறிவிட்டது. அகிம்சை மட்டுமே ஒரே வழி, வேறு வழியில்லை. பிரதேசம் அல்லது வளங்களை வெல்வதை விட, நமது மனிதநேயத்தை இழப்பது குறித்து

02ம் பக்கம்பார்க்க...



## காஸா குறித்த இஸ்ரேலின் முடிவு நிலைமையை மேலும் சிக்கலாக்கும்

### இலங்கை ஆழ்ந்த கவலை



காஸாவை இஸ்ரேல் கைப்பற்றுவதற்கு எடுத்த முடிவு குறித்து இலங்கை அரசு ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை வன்முறையை மேலும் தீவிரப்படுத்தி, பாலஸ்தீன மக்களின் துயரத்தை மோசமாக்கும் என இலங்கை எச்சரித்துள்ளது.

02ம் பக்கம்பார்க்க...

## ஜனாதிபதி அனுர தலைமையில் உலக ஆதிவாசிகள் தினம்



ஜனாதிபதி தலைமையில் உலக ஆதிவாசிகள் தின தேசிய கொண்டாட்டம் தம்பானயில் நடைபெற்றது.

உலக ஆதிவாசிகள் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய வைபவம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நேற்று (09) முற்பகல் தம்பான ஆதிவாசி அருங்காட்சியக வளாகத்தில்

03ம் பக்கம்பார்க்க...

## சர்வதேச சட்டத்துக்கு இஸ்ரேல் அடிபணிய வேண்டும்

### ஐ.நா.செயலாளர் வலியுறுத்து!

காசா நகரத்தை முழுமையாக கைப்பற்றும் இஸ்ரேலின் முடிவு, பாலஸ்தீனியர்களின் நிலைமையை மேலும் மோசமாக்கும் ஆபத்தான ஆக்கிரமிப்பு என்று ஐக்கிய நாடுகள்

03ம் பக்கம்பார்க்க...

## வைத்தியர்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு வழங்கப்படும்

### நாளைய போராட்டத்தினை தடுக்க முயற்சி



### சுகாதார அமைச்சர் நளிந்த

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாளை திங்கட்கிழமை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ள வேலை நிறுத்த போராட்டத்தினை தடுப்பதற்கு சுகாதார அமைச்சின் சார்பில் சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இனங்காணப்பட்டுள்ள

03ம் பக்கம்பார்க்க...



# ஊடகவியலாளர் அக்குறனை ராபி காலமானார்



ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் நிறைவேற்று குழு உறுப்பினரும் பிராந்திய ஊடகவியலாளருமான அக்குறனையைச் சேர்ந்த ராபி சிஹாப்தீன் இன்று அதிகாலை காலமானார்.

அன்னாரின் ஜனாஸா இன்று காலை 11:00 மணிக்கு அக்குரனை ஆறாம் கட்டையில் உள்ள தாய் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

அன்னாரின் மறைவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது பாவங்களை மன்னித்து மேலான ஜன்னத்துல் பிர்தவ்ஸ் என்னும் சுவர்க்கத்தை வழங்க அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றோம்.

**தகவல்**

**ரஷீத் எம் ரியாழ்**

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தவிசாளர் மௌலவி முஹம்மத் மிப்லால், செயலாளர் நாயகம், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் மற்றும் கட்சியின் இணைப்பு செயலாளர் ஏ.எம்.அஸ்வர் ஆகியோர் இங்கு உரையாற்றினர்.

இங்கே தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்கள்,

இந்த நாட்டின் பிரதான வருமான வழிகளில் சுற்றுலாத்துறை முக்கியத்துவமானது. அதனை மேம்படுத்த வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. அதற்காக நாட்டின் இறைமையை பாதிக்கும் விடயங்களுக்கு அனுமதிக்க முடியாது. அது முஸ்லிம் நாடுகளாக இருந்தாலும் சரி, மேற்கத்தைய நாடுகளாக இருந்தாலும் சரி. இந்த அத்துமீறல்களை இஸ்ரேல் அல்ல பங்களாதேஷ், துருக்கி போன்ற முஸ்லிம் நாடுகள் செய்தாலும் சரி நாங்கள் அதை எதிர்ப்போம். எங்களை அரச சம்பளம் பெறும் ஒரு படையினர் பின்னாலேயே கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அவர்களின் எரிபொருள் விரையமாகுமே தவிர வேறு எதையும் எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாது.

பொத்துவில் அறுகம்பே பகுதியில் அரச அனுமதிகள் எதுவுமின்றி சட்டவிரோதமாக இயங்கும் இஸ்ரேலிய வழிபாட்டு தளத்தினால் அருகில் இருக்கும் பள்ளிவாசலும் இருள் சூழ்ந்து இஸ்ரேலிய வழிபாட்டு தளத்தின் வாகன தரிப்பிடம் போன்று மாறியுள்ளது. கிழக்கில் அரசியல் செய்யும் மூன்று காங்கிரஸ் தலைவர்களும் இந்த விடயங்களில் கவனம் செலுத்தி அந்த பள்ளிவாசலை எதிர்காலத்தில் குறைந்தது மூடிவிடுவதிலிருந்தாவது பாதுகாக்க வேண்டும்.

சிவில் அமைப்புக்களும், மக்கள் பிரதிநிதிகளும் விரல் நீட்டிக்கொண்டிருக்கும் இஸ்ரேலிய ஆதிக்கத்தை கட்டுப்படுத்த வேண்டிய கடமை அரசியல்வாதிகளுக்கும், ஆன்மீக தலைமைகளுக்கும் எம் எல்லோருக்கும் இருக்கிறது. முஸ்லிம் காங்கிரசை எதிர்த்து பேசி அன்னாசியில் தேர்தல் கேட்டு தற்போது, முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து பொத்துவிலை ஆளும், பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எம். எம். முஷாரப் இலங்கையின் எதிர்காலத்திற்கு அச்சுறுத்தலாக மாறி வரும் சட்டவிரோத சபாத் இல்லங்களை மூடிவிட வேண்டும். பின்னர் அதனை யாரை கொண்டு திறக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கலாம்.

சட்டவிரோத நிலையங்களை மூடும் அதிகாரம் பிரதேச சபை தவிசாளருக்கு இருக்கிறது.

தலைவர் அஷ்ரபின் மரணத்தின் பின்னர் வாயால் கதைத்தவற்றை தவிர சமூகத்தின் நலனுக்காக இந்த காங்கிரஸ்காரர்கள் எதுவும் செய்யவில்லை. கடந்த காலங்களில் வாயால் பேசிக்கொண்டிருந்ததையே இப்போதும் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். வடக்கை தமிழ் ஒருவரே முதலமைச்சராக வந்து ஆட்சி செய்ய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடா அங்கு சிங்களவர் ஒருவர் வர முடியாது அது போன்று கிழக்கிலே சிங்களவர் ஒருவர் முதலமைச்சராக வரக்கூடாது வேறு யாரும் வரவும் முடியாது முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரே வரவேண்டும் என்ற கொள்கையில் பயணிப்பவர்கள் நாங்கள்.

இக்கொள்கையின்படி, கிழக்கு மாகாணத்தை முஸ்லிம் முதலமைச்சர் ஆழ வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கிறோம்.

அதற்காக எதிர்வரும் காலங்களில் சகல காங்கிரஸ்காரர்களையும், பெருந்தேசிய கட்சியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளையும் ஒன்றிணைத்து ஒரு கூட்டணியை அமைக்கும் பணியை முன்னெடுத்து வருகிறோம்.

இஸ்ரேலிய அத்துமீறல்களை கண்டித்து நாங்கள் அங்கம் வகிக்கும் சபைகளில் கண்டன தீர்மானங்களை நிறைவேற்ற தயாராக உள்ளோம். அது பன்று இச்சந்தர்ப்பத்திலும் இஸ்ரேலியர்களின்

அடர்த்தியான செயற்பாடுகளுக்கு நாங்கள் எதிராக குரல் கொடுப்போம் என்றும் குறிப்பிட்டனர்.

இந்த ஊடக சந்திப்பில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பிரதித் தலைவர் கலாநிதி ஷெரீப் ஹக்கீம் உட்பட உயர்பீட உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இஸ்ரேலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் மிகவும் கவலைப்பட வேண்டும். நாம் அதை இழந்தால், எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் என்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

"இஸ்ரேலிய இராணுவத்தின் ஆலோசனை மற்றும் எச்சரிக்கைகளை மீறி, காசா முழுவதையும் இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர திட்டமிட்டுள்ளதாக பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார். நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது அங்கு பிணைக் கைதிகளை ஆபத்தில் ஆழ்த்தக்கூடும்.

மேலும் பாலஸ்தீன பொதுமக்களைக் கொல்லக்கூடும்" என நியுயோர்க் டைமஸ் வெளியிட்ட செய்தியை மீள்பதிவிட்டே சஜித் பிரேமதாச இப்படி குறிப்பிட்டுள்ளார்.

## காஸா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை, வெள்ளிக்கிழமை காசா நகரை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கான திட்டத்தை அங்கீகரித்தது. இதனைத் தொடர்ந்து, போரால் பாதிக்கப்பட்ட பாலஸ்தீன பிரதேசத்தில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள் விரிவாக்கப்பட்டுள்ளன.

இந்த முடிவு உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் கடும் விமர்சனங்களை எழுப்பியுள்ளது.

இலங்கையின் வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு வெளியிட்ட அறிக்கையில், உடனடி போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து தரப்பினரும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளை தீர்த்து, நிலையான அமைதியை அடைய வேண்டும் என இலங்கை வலியுறுத்தியுள்ளது.

## பலஸ்தீனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆரப்பாட்டத்தினை ஏற்பாடு செய்துள்ளது.

சில தினங்களுக்கு முன் கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்ட மலேஷிய ஆதரவுடனான இயக்கம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

அரசியல் கட்சிகள், பலஸ்தீன் ஆதரவு அமைப்புகள்,சமய இயக்கங்கள் உட்பட மேலும் பல அமைப்புகளும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உள்ளன.

மலேசியா ,காஸ ா ஸிந்தா என்ற அமைப்பு அண்மையில்கொழும்பில் கூடி இலங்கையிலுள்ள பலஸ்தீன ஆதரவு அமைப்புகளை ஒற்றுமைப் படுத்தும் கூட்டமொன்றினை நடாத்தின. அதன்போதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.மலேஷியப் பிரதமர் அன்வர் இப்ராகிமின ஆதரவுடன் இந்த இயக்கம் செயற்பட்டு வருகிறது.

## அதுரலிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அதைச் சுற்றியுள்ள சுமார் 10 இடங்களில் சோதனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


இதில் பல விகாரைகள் மற்றும் வீடுகள் அடங்கும் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் தேடப்பட்ட இடங்களில் தேரர் வந்ததற்கான எந்த தகவலும் இல்லாததால், அவர் நாட்டை விட்டு தப்பிச் செல்வதை தடுக்க சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தேரர் தென் மாகாணத்தில் உள்ள பல விகாரைகளிலும் பல அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ள பல வீடுகளிலும் மறைந்திருக்க அதிக வாய்ப்புள்ளதால், கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் தற்போது அந்த இடங்களையும் கண்காணித்து வருகின்றனர்.

2020 ஆம் ஆண்டு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றதற்காக, அபே ஜன பல கட்சியின் பொதுச் செயலாளர் வேதினிகம விமலதிஸ்ஸ தேரரை கடத்தி, அவரை அச்சுறுத்தியமை தொடர்பில் அத்துரலியே ரத்தன தேரர் கைது செய்யப்பட உள்ளார்.

கடந்த காலங்களில் தடைப்பட்ட இந்த விசாரணை, கொழும்பு குற்றப் பிரிவின் புதிய இயக்குநராக மூத்த பொலிஸ் கண்காணிப்பாளர் இந்திக லொக்குஹெட்டி நியமிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஜனாதிபதி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இடம்பெற்றது.

இலங்கையின் பிரதான ஆதிவாசியினத் தலைவரான, விஷ்வகீர்த்தி வனஸ்பதி ஊருவரிகே வன்னியலெத்தோ, 1996 ஆம் ஆண்டு ஜெனீவாவில் நடந்த ஆதிவாசிகள் மாநாட்டில் கலந்து கொண்டபோது, உலக ஆதிவாசிகள் தின வைபவத்தை இலங்கையில் கொண்டாடுவது குறித்த கருத்தாடல் ஆரம்பமாகியதுடன், அதன்படி, இலங்கையின் முதல் தேசிய ஆதிவாசிகள் தின கொண்டாட்டம் 1999 ஆம் ஆண்டு கொழும்பு விஹார மகா தேவி பூங்காவில் நடைபெற்றது.

இந்த முறையும், பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து தேசிய ஆதிவாசிகள் தின கொண்டாட்டத்தை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்ததுடன், அமைதி மற்றும் சுபீட்சத்திற்காக ஆசீர்வதிக்கப்பட்ட பாரம்பரிய "கிரி கொரஹா" சம்பிரதாயம் உட்பட ஆதிவாசிகளின் தனித்துவமான பல்வேறு கலாசார அம்சங்களுடன் இந்த நிகழ்வு வண்ணமயமாக இருந்தது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, முன்னாள் ஆதிவாசிகள் தலைவர் ஊருவரிகே திஸாஹாமியின் உருவச்சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தியதோடு இந்த வைபவம் தொடங்கியதுடன், அருங்காட்சியக வளாகத்தில் ஜனாதிபதி, வெள்ளை சந்தன செடியையும் நட்டார்.

இலங்கையின் பிரதான ஆதிவாசியினத் தலைவரான, விஷ்வகீர்த்தி ஸ்ரீ வனஸ்பதி ஊருவரிகே வன்னியலெத்தோ, ஆதிவாசியினரின் பிரச்சினைகள் அடங்கிய ஒரு மகஜர் ஒன்றை ஜனாதிபதியிடம் கையளித்ததுடன், நினைவுப் பரிசொன்றையும் வழங்கிவைத்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் ஆதிவாசியின தலைவருக்கு அன்பளிப்பும் வழங்கி வைக்கப்பட்டது.

ஆதிவாசியின சமூகத்தினரின் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனை செய்வதற்காக விற்பனை கூடங்கள் நிர்மாணிக்க ஆரம்பித்தல் மற்றும் பாரம்பரிய அறிவு மற்றும் தேசிய வளங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் இலங்கையில் முதல் ஆதிவாசி மூலிகை சவர்க்காரம் "கைரி" அறிமுகப்படுத்தப்பட்டதுடன், ஆயுர்வேத சவர்க்காரத் தயாரிப்பு பயிற்சியை நிறைவு செய்த ஆதிவாசியின பெண்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி உள்ளிட்ட அமைச்சர்கள், அரச அதிகாரிகள், இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனேடிய உயர் ஸ்தானிகர் எரிக் வொல்ஷ் உட்பட கனேடிய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் மற்றும் அதிதிகள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## சர்வதேச...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் எச்சரித்துள்ளார்.

காசாவை முழுமையாகக் கைப்பற்றி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு முன்மொழிந்த முடிவுக்கு அந்நாட்டு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதற்கு பல முனைகளில் இருந்தும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

சீனா, துருக்கி, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் வெளியிட்ட அறிக்கையில், "இஸ்ரேல் அரசாங்கம் காசா நகரத்தைக் முழுமையாக கைப்பற்றும் முடிவால் நான் மிகவும் கவலையடைந்துள்ளேன்.

இந்த முடிவு ஆபத்தான ஆக்கிரமிப்பு ஆகும்.

ஏற்கனவே பேரழிவில் சிக்கியுள்ள இலட்சக்கணக்கான பாலஸ்தீனியர்களின் வாழ்வை இது மேலும் ஆபத்தில் ஆழ்த்தும்.

மீதமுள்ள பணயக்கைதிகள் உட்பட மேலும் பல உயிர்களுக்கு இது ஆபத்தை விளைவிக்கும்.

காசா நகரத்தைக் கைப்பற்றும் இஸ்ரேலின் திட்டம் பொதுமக்கள் மற்றும் பணயக்கைதிகளுக்கு அச்சத்தைத் தூண்டுகிறது.

காசாவில் உள்ள பாலஸ்தீனியர்கள் தொடர்ந்து பயங்கரமான பேரழிவை சந்தித்து வருகின்றனர்.

நிரந்தர போர்நிறுத்தம், காசா முழுவதும் தடையற்ற மனிதாபிமான உதவிகள் மற்றும் அனைத்து பணயக் கைதிகளையும் உடனடியாகவும் நிபந்தனையின்றியும் விடுவித்தல் ஆகியவற்றை உடனே செய்யவேண்டும்.

சர்வதேச சட்டத்துக்கு இஸ்ரேல் கீழ்ப்படிய வேண்டும்.

இந்த சட்டவிரோத ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவராமல், இந்த மோதலுக்கு நிலையான தீர்வு கிடைக்காது.

காசா பாலஸ்தீன அரசின் ஒருங்கிணைந்த பகுதியாகும், அது அவ்வாறே தொடர்ந்து இருக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், காசாவை கைப்பற்றும் இஸ்ரேலின் முடிவு குறித்து விவாதிக்க ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில் நாளை (10) அவசரக் கூட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளது.

## வைத்தியர்களின்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பிரச்சினைகளுக்கு படிப்படியாக தீர்வு வழங்கப்படும்.

எனவே பொது மக்களுக்கு தடையற்ற மருத்துவ சேவையை வழங்குவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சனிக்கிழமை (09) இடம்பெற்ற இலங்கை அவசர மருத்துவ நிபுணர்கள் கல்லூரியின் வருடாந்த ஆய்வு மாநாட்டில் பங்கேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு வேலை நிறுத்த போராட்டத்துக்குச் செல்வதற்கான காரணமொன்று இருக்கும் என நான் நினைக்கவில்லை.

அவர்களுடன் நான் கலந்துரையாடினேன். சில இடங்களிலுள்ள பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன. தற்போது சேவையாற்றும் வைத்தியர்கள் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களுடன் இணைக்கப்பாட்டுடனேயே பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். அதற்கு நாம் நியாயமான தீர்வொன்றை வழங்குவோம்.

மக்களுக்கு சிறந்த சேவை வழங்க வேண்டும் என்பதே அனைவரதும் நோக்கமாகும். எவ்வாறிருப்பினும் கடும் நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே நாம் அந்த சேவையை ஆற்றிக் கொண்டிருக்கின்றோம். கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடிகளுக்கு தற்போது படிப்படியாக தீர்வினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம். எனவே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடாது என எதிர்பார்க்கின்றோம்.

கடந்த ஆட்சிக் காலங்களில் செயற்பட்டதைப் போன்றே தற்போதும் சில அதிகாரிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு நியாயமானதல்ல. சுகாதார அமைச்சின் அனைத்து அதிகாரிகளும் ஒரே இலக்குடனேயே பணியாற்றுகின்றனர். சுகாதாரத்துறையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு என்ன காரணம் என்பதை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நன்கு அறியும்.

தட்டுப்பாடு நிலவும் மருந்துகளை விரைவாக கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. திங்களன்று முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் வேலை நிறுத்த போராட்டத்தினை தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் சுகாதார அமைச்சின் சார்பில் நாம் முன்னெடுத்திருக்கின்றோம். எமது முயற்சி வெற்றியளிக்கும் என்று நம்புகின்றோம் என்றார்.

## வேகமாக அதிகரிக்கும் நுரையீரல் புற்றுநோய்

நாட்டில் நுரையீரல் புற்றுநோய் வேகமாக அதிகரித்து வருவதாக வெலிசறை தேசிய மார்பு வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற அவர்கள், ஒவ்வொரு ஆண்டும் 2,000 - 3,000 நுரையீரல் நோயாளிகள் பதிவாவதாகக் கூறினர்.

நிகழ்வில் பேசிய சுவாச நோய் வைத்திய நிபுணர் வைத்தியர் சமன் இத்தல்மல்கொட, நுரையீரல் புற்றுநோய் ஆண்களிடையே இரண்டாவது மிகவும் பொதுவான புற்றுநோயாக மாறியுள்ளது என தெரிவித்தார்.

மேலும் கருத்து வெளியிட்ட வைத்திய நிபுணர்,

"தற்போது, இலங்கையில் ஆண்களிடையே நுரையீரல் புற்றுநோய் இரண்டாவது மிகவும் பொதுவான புற்றுநோயாகும்.

அத்துடன் 2021 ஆம் ஆண்டின் தரவுகளைக் கருத்தில் கொண்டால், நுரையீரல் புற்றுநோய் அவர்களின் முதல் 10 புற்றுநோய்களில் ஒன்றாகும்.

இலங்கையில் கடந்த 5-10 ஆண்டுகளில் நுரையீரல் புற்றுநோய் அதிகரித்து வருகிறது. இந்த அதிகரிப்பு ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரிடமும் பதிவாகியுள்ளது.

இந்த நுரையீரல் புற்றுநோய்க்கு புகைபிடித்தல் ஒரு முக்கிய காரணியாகும்.

மேலும், தற்போதைய ஆய்வு அறிக்கைகளின்படி, ஒருபோதும் புகைபிடிக்காதவர்களும் நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதைக் கண்டறிந்துள்ளோம்.

குறிப்பாக, புகைபிடிப்பதில் நேரடியாக ஈடுபடாத பெண்களும் நுரையீரல் புற்றுநோயின் அதிகரிப்பைக் காண்கிறார்கள்.

இது நமது காற்றில் உள்ள காற்று மாசுபாட்டிற்கும் நமது வீடுகளில் உள்ள காற்றுக்கும் நேரடித் தொடர்பைக் கொண்டிருக்கலாம்.

ஆண்டுதோறும் பதிவாகும் நுரையீரல் புற்றுநோய் நோயாளிகளின் எண்ணிக்கையை 2021 முதல் ஆம் ஆண்டு முதலான தரவுகளை கருத்தில் கொண்டால், ஆண்டுதோறும் 2,000-3,000 புதிய புற்றுநோயாளர்கள் பதிவாகின்றன." என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட வைத்திய நிபுணர் எஷாந்த் பெரேரா, இந்த நோயின் அறிகுறிகளை குறைத்து மதிப்பிட முடியாது என்று கூறினார்.

"மார்பகப் புற்றுநோயைப் பற்றி பொதுமக்களுக்கு எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? பல முக்கியமான அறிகுறிகள் உள்ளன.

சுவாச நோயாளிகளிடம் காணப்படும் இருமல். குறிப்பாக இருமல் நீண்ட நேரம் நீடித்தால், இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு மேல் நீடித்தால், அல்லது அடிக்கடி வந்தால், அது மிக முக்கியமான அறிகுறியாகும்.

நாம் அதை எளிதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அத்துடன் இருமல் சரியாகி அடுத்த மாதம் மீண்டும் வந்தால், அது பல சுவாச நோய்களின் அறிகுறியாக இருக்கலாம்.


இன்னொரு விடயம் என்னவென்றால், இருமும் போது இரத்தம் வருதல், சிலருக்கு சுவாசிப்பதில் சிரமம் ஏற்படல் போன்றவை மார்பக புற்றுநோயால் ஏற்படலாம்.

அத்துடன் மார்பகப் புற்றுநோய் அமைந்துள்ள பகுதியில் இருந்து மார்பு வலி பரவத் தொடங்கும் போது, பல்வேறு இடங்களில் வலிமிகுந்த நிலைமைகள் ஏற்படலாம்.

மேலும், சில நோயாளிகளுக்கு நீண்ட காலமாக இருக்கும் காய்ச்சல், பசியின்மை மற்றும் அசாதாரண எடை இழப்பு ஆகியவை இந்த நோயின் அறிகுறிகளாக இருக்கலாம்.

இது உடலின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவக்கூடும்.

அது எங்கு பரவுகிறது மற்றும் நிலைபெறுகிறது என்பதைப் பொறுத்து ஏற்படும் அறிகுறிகள் மாறுபடும். "எனவே இந்த மார்பகப் புற்றுநோயைப் பற்றி நாம் அறிந்திருப்பது மிகவும் முக்கியம்." என்றார்.

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 AUGUST 10 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# காஸா கைப்பற்றலைத் தடுப்பதற்கு தீவிர அழுத்தம் கொடுக்க வேண்டும்

ஒன்றரை இலட்சத்துக்கு மேற்பட்ட பலஸ்தீனியர்களை படுகொலை செய்த இஸ்ரேல் பலஸ்தீனின் காசாவை கைப்பற்றி கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு முயற்சிக்கின்றது. இதன்படி கடந்த வியாழக்கிழமை நெதன்யா/ஹ அரசின் அமைச்சரவை காசாவை கைப்பற்றுவதற்கு தீர்மானம் எடுத்துள்ளது. இஸ்ரேலின் இத் தீர்மானம் சர்வதேச மட்டத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. முஸ்லிம்கள் மத்தியில் மட்டுமின்றி உலகின் ஏனைய சமயத்தவர்கள் மத்தியிலும் இத் தீர்மானம் குறித்து பெரும் எதிர்ப்பலைகள் உருவாகியுள்ளன.

அரபு நாடுகள் இந்த விடயத்தில் அமைதி காக்கின்ற போதும் அவுஸ்திரேலியா, ஜப்பான், கொரியா உட்பட பல நாடுகளில் மக்கள் வீதிக்கு இறங்கி தமது எதிர்ப்பை காட்டி வருகின்றனர். அந்நாடுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் இஸ்ரேலுக்கு எதிராக குரல் எழுப்பி வருவதனை படக் காட்சிகள் உறுதிப்படுத்தி இருக்கின்றன.

பிரித்தானியாவிலும் அது ஏற்கனவே கொண்டிருந்த நிலைமைகள் மாறி இப்போது பலஸ்தீனுக்கு ஆதரவான நிலப்பாட்டை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பதனை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. இலங்கை அரசாங்கமும் இஸ்ரேலின் தீர்மானம் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்து அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. சர்வதேச சட்டவிதிகளை மீறி ஒரு நாட்டின் திறமைக்கு மாற்றமாக தன் ஆயுத பலத்தை பயன்படுத்தி அமெரிக்காவின் ஆதரவுடன் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் இந்த அராஜக செயல்பாட்டை நான் எப்படியும் முறியடிப்பதாக பலஸ்தீனில் இயங்கி வரும் ஹமாஸ் இயக்கம் தெரிவித்துள்ளது. கடந்த 22 மாதங்களாக இஸ்ரேல் மேற்கொண்டு வரும் இந்த தாக்குதல் ஓர் இன அழிப்பு என உலகின் பல நாடுகள் மட்டுமின்றி சர்வதேச அமைப்புகளும் தெரிவித்து வருகின்றன. இவர்களின் எதிர்ப்புக்கு இஸ்ரேல் செவிமடுக்காது இருப்பது ஏன்? இஸ்ரேலின் இந்த தீர்மானத்தை இஸ்ரேலிய மக்களும் தமது எதிர்ப்பினை ஆர்ப்பாட்டங்கள் நடத்தி தெரிவித்து வருகின்றனர்.

கடந்த வியாழன் அன்று இஸ்ரேலின் பல பகுதிகளிலும் பரவலான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. அரசாங்க உறுப்பினர்கள் கூட நெதன்யா/ஹவின் இந்த திட்டத்திற்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இராணுவ தளபதி கூட தமது படையினர் மிகவும் சோர்ந்து போயிருப்பதாக தெரிவித்துள்ளார். இந்தப் பின்னணியில் இஸ்ரேல் அமெரிக்காவின் தேவைக்காக காசாவில் உள்ள எண்ணெய் வளங்களை சுரண்டுவதற்காக காசாவை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு தயாராகி வருகின்றனர். பலஸ்தீன் காசாவை இழக்குமா அதன் பொறுப்பினை அரபு முஸ்லிம் நாடுகளும் ஏற்க வேண்டும் என பலரும் தெரிவித்து வருகின்றனர்.

காசாவில் இப்பொழுது 20 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அந்த மக்களில் பெரும்பாலானவர்கள் பசியில் வாடும் நிலையிலேயே காசாவை நெதன்யா/ஹ கைப்பற்ற முயற்சிக்கின்றார். பலஸ்தீன் உடைய மக்களின் இன்றைய நிலை மிக கவலைக்குரியது.

நோயாளிகள் ஆயிரக்கணக்கானவர்கள் இடிபாடுகளுக்கு கீழ் இருக்கின்ற நிலைமையில் தான் காசா இருக்கின்றது. எனினும் காசாவின் பெரும் பகுதியை காசா மக்கள் இன்று இழந்து இருக்கின்றார்கள். ஐ.நா. வின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் சர்வதேச சட்டங்களுக்கு எதிராகவே நெதன்யாஹ⁶ இந்த காசாவை கைப்பற்றும் முயற்சியை மேற்கொண்டு வருகின்றார். காசா மக்களின் கைகளில் இருந்து காசா பறி போகுமாக இருந்தால் காசா பறி போவதனை அனுமதிக்க மாட்டோம் என்று பலஸ்தீனில் உரிமைக்காக போராடி வரும் ஹமாஸ் இயக்கம் தெரிவித்துள்ளது.

என்றாலும் கூட அடுத்த சில நாட்களில் என்ன நடக்கும் என்று தெரியாமல் இருக்கின்றது. உலகின் பல நாடுகள் அமெரிக்கா, ஜெர்மன் போன்ற நாடுகள் வழங்குகின்ற ஆயுதங்களை பயன்படுத்தியே இஸ்ரேலியர்கள் இந்த யுத்தத்தை முன்னெடுத்து செல்கின்றனர்.

எமது வேண்டுகோள் அமெரிக்கா மற்றும் ஜெர்மனின் நட்பு நாடுகள் இஸ்ரேலுக்கு வழங்குகின்ற ஆயுதங்களை நிறுத்தினால் இந்த யுத்தம் நிறுத்தப்படலாம். எனவே இதிலே அமெரிக்காவை ஆதரிக்கின்ற முஸ்லிம் நாடுகள் தமது அழுத்தத்தை பயன்படுத்தி காசாவை கைப்பற்றுவதை நிறுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும்.

அதுவே இன்றுள்ள தேவையாகும். எனவே முஸ்லிம் உலகின் சில நாடுகள் அண்மை காலத்தில் அமெரிக்காவுக்கு பல வகையான உதவிகளை செய்து இருக்கின்றது.

அதன் மூலம் அமெரிக்காவுடன் நெருங்கி செயல்படுகின்ற நாடுகள் பல அமெரிக்காவுக்கு அழுத்தத்தை கொடுத்து இந்த காசா கைப்பற்றுதலை நிறுத்துவதே இன்றுள்ள அவசரத் தேவை என்றும் அதன் பிறகு சமாதான வளர்ச்சி தொடரலாம் என்றே நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

# இந்தியாவுடனான உறவுகள் குறித்த விசேட சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பங்கேற்பு



இந்திய அரசு, இந்திய வெளிவிவகார அமைச்சு மற்றும் இந்திய கலாச்சார உறவுகளுக்கான கவுன்சில் என்பன இணைந்து இலங்கையின் 14 அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இளம் அரசியல் தலைவர்கள் 24 பேருக்கு இந்தியாவின் பொருளாதாரம், கல்வி, தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார உறவுகள் போன்ற பல்வேறு துறைகளில் அனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்பினை அண்மையில் வழங்கியிருந்தது.

இந்த வாய்ப்பைப் பெற்று இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்ட இத்தரப்பினர், இலங்கைக்குத் திரும்பியதும் தங்கள் அனுபவங்களையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்துடன் இலங்கையின் அரசியல் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடனான சந்திப்பொன்றை நேற்றைய தினம் தாஜ் கொழும்பிலுள்ள சமுத்ரா ஹோட்டலில் இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் இலங்கையின் அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்ட இச்சந்திப்பில், 14 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 24 இளம் அரசியல் தலைவர்கள், தங்கள் இந்தியப் பயணத்தின் போது பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இங்கு, இந்தியாவின் விரைவான பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம், கல்வித் துறையில் காணப்படும் நவீனத்துவம், கலாச்சார உறவுகள் மற்றும் ஜனநாயக மரபுகள் உள்ளிட்ட பல துறைகளில் கருத்துக்கள் முன்வைத்து தாம் பெற்ற அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

இச்சந்திப்பில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரின் அழைப்பின் பேரில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.



# மெற்றோ பொலிடன் கல்லூரியின் பட்டமளிப்பு விழா





**(அஷ்ரப் ஏ சமட்)**

இலங்கையின் முதன்மையான தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் ஒன்றான மெட்ரோபொலிட்டன் கல்லூரி, கடந்த 3 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவுடன் ஒரு முக்கிய மைல்கல்லைக் எட்டியது. இந்த நிகழ்வில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்த 555 பேர் பட்டமளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இதில் தேசிய மற்றும் சர்வதேச பிரமுகர்கள், இராஜதந்திரிகள், கல்வியாளர்கள் என முக்கிய பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் நீதி மற்றும் உயர்கல்வி அமைச்சரும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான கௌரவ ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் பொது விநியோக அமைச்சருமான கௌரவ டாக்டர் ஹர்ஷ டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ தயாசிறி ஜெயசேகர, கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் முன்னாள் கல்வி அமைச்சருமான கௌரவ பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ஜனாதிபதி சட்டத்தரணியும் முன்னாள் நீதி அமைச்சருமான திரு. விஜயதாச ராஜபக்ஷ மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் (COPE) முன்னாள் தலைவர் கௌரவ பேராசிரியர் சரித ஹேரத் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மெட்ரோபொலிட்டன் கல்லூரியின் தலைவரும், கல்முனையின் முன்னாள் மேயரும், லங்கா அசோக் லேலண்டின் முன்னாள் தலைவருமான டாக்டர் சிராஸ் மீராசாஹிப் மற்றும் தேசிய நிறுவன மேம்பாட்டு ஆணையத்தின் (NEDA) ஆதரவின் கீழ் இந்த விழா நடைபெற்றது. மெட்ரோபொலிட்டன் கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி திருமதி அஃப்ரா சிராஸும் இதில் கலந்து கொண்டார்.

தற்போது, கல்லூரியில் 100க்கும் மேற்பட்ட ஆசிரிய உறுப்பினர்களும், 1,500க்கும் மேற்பட்ட மாணவர்களும் டிப்ளமோ முதல் முனைவர் பட்டம் வரையிலான படிப்புகளில் சேர்ந்துள்ளனர். முகாமைத்துவம், கல்வி, உளவியல், சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் சமூக அறிவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளை உள்ளடக்கியது.

வாழ்நாள் முழுவதும் கற்றல், தொழில் சார்ந்த பயிற்சி மற்றும் உலகளாவிய வெளிப்பாடு ஆகியவற்றில் வலுவான முக்கியத்துவம் இந்த திட்டங்களுக்கு வழங்கப்படுகிறது.

மெட்ரோபொலிட்டன் கல்லூரியின் முழுமையான அணுகுமுறை, மாணவர்கள் உலகளாவிய இயக்கத் திட்டங்கள், மென் திறன் மேம்பாடு மற்றும் விரிவான தொழில்துறை பயிற்சி உள்ளிட்ட வகுப்பறைக்கு அப்பால் மதிப்புமிக்க கற்றல் அனுபவங்களைப் பெறுவதை உறுதிசெய்கிறது.

26 ஆண்டுகளுக்கும் மேலான ஒரு பாரம்பரியத்துடன், மெட்ரோ பொலிட்டன் கல்லூரி, கல்விச் சிறப்பு, உலகளாவிய பொருத்தம் மற்றும் சமூக தாக்கத்திற்கான அதன் உறுதிப் பாட்டை தொடர்ந்து நிலைநிறுத்தி, வேகமாக வளர்ந்து வரும் உலகில் செழிக்கத் தயாராக இருக்கும் பட்டதாரிகளின் தலைமுறைகளை உருவாக்குகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடையமாகும்.

# நமடகஹவத்த மஸ்ஜித் சலாஹில் முஹர்ரம் சிறப்பு நிகழ்வுகள்

முஹர்ரம் மாதத்தைச் சிறப்பிக்கும் வகையில் கலேவெல நமடகஹ வத்த மஸ்ஜித் சலாஹ் அரபு பாடசாலை மாணவர்களது சிறப்பு நிகழ்ச்சிகள் அன்மையில் இடம்பெற்றன


இப்பாடசாலை அதிபரும் மஸ்ஜித் இமாமுமான செய்க் நபீல் இப்னு இஸ்மாயிலின் ஏற்பாட்டிலும் தலைமையிலும் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச முக்கிய பிரமுகர்கள் பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டு நிகழ்ச்சியில் பங்குபற்றிய மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கி வைத்ததுடன் பாடசாலை அதிபரும் மஸ்ஜித் இமாமுமான இஸ்மாயிலின் 15 வருடகால சேவையை கௌரவித்து மாத்தளை மாவட்ட மனித உரிமைகள் பாதுகாப்பு பணிப்பாளர் எம்.இக்பால் ஜேபி நினைவுச்சின்னம் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.






# தொலைக்காட்சி "அபுநானா நாடகப் புகழ்" எம்.எம்.ஏ. லத்தீப் காலமானார்

**( ஐ. ஏ. காதிர் கான் )**



பழம்பெரும் ஈழத்துத் திரைப்பட நடிகரும், தொலைக்காட்சி "அபுநானா நாடகப்புகழ்" மற்றும் முஸ்லிம் சேவையின் முதுபெரும் கலைஞர் எம்.எம்.ஏ. லத்தீப், கடந்த ஞாயிற்றுக்கிழமை (03) காலமானார்.

இவர் "லியாஉல் - ஃபன்னான், கலைச்சுடர் எம்.எம்.ஏ. லத்தீப், புதுக்கடை லத்தீப்" என கலை உலகில் பவனி வந்தவர். நாடகத் துறையில் தனக்கென தனியான பெயரைப் பெற்றிருந்தவர். மேடை நாடகம், வானொலி நாடகம், சினிமா, சின்னத்திரை என இவரது கலைப்பயணம் நீண்டிருந்தது. இஸ்லாமிய கீதங்கள் பலவற்றையும் இவர் பாடியுள்ளார்.

1945 இல் கொழும்பு, புதுக்கடையில் பிறந்தவர். அரசு விருதுகள் மற்றும் பல விருதுகளையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் 155 பஸ் சேவை 11 முதல் ஆரம்பம்

**( ஐ. ஏ. காதிர் கான் )**

மிக நீண்ட காலமாக கொழும்பில் சேவை இடை நிறுத்தப்பட்டிருந்த 155 இலக்க பஸ் சேவை மீண்டும் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 5.30 மணி முதல் பஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

155 ஆம் இலக்க பஸ் வண்டிகள், மட்டக்குளி தொடக்கம் நகர மண்டபம் வரை சேவையில் ஈடுபடுத்தப்படும் என பஸ் டிப்போ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# விற்பனை செய்வதற்கு சரியான சந்தை வசதி இன்மையால் சோளம் விவசாயிகள் அவதி

**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)**

மகாவலி எச் வலயத்தில் சுமார் 2000 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட சோள அறுவடையை நியாயமான விலையில் விற்பனை செய்ய முடியவில்லை என்றும் கருதுகளுடன் கூடிய சோளச் செடிகளை ஒரு கிலோகிராம் இருபத்தைந்து ஷரூபாய்க்கு கால்நடை தீவனமாக விற்க வேண்டியதுள்ளதாக கால் நடை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அதுல திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த ஆண்டு சோள அறுவடை வெற்றிகரமாக இருந்த போதிலும் அதை விற்பனை செய்வதற்கு சரியான சந்தை அல்லது சரியான விலை இல்லாததே காரணம் என்றும் திஸாநாயக்க தெரிவித்தார்.

மகாவலி எச் வலயத்தில் சோளம் பயிரிடப்பட்ட தாம் உட்பட விவசாயிகளின் நிலை குறித்து மேலும் கருத்துக்களை வெளிப்படுத்திய திஸாநாயக்க.



ஒரு கிலோ சோள விதைக்கு அரசாங்கத்தின் உத்தரவாத விலை 140 என்றாலும் ஒரு கிலோ விற்கு நான்கு காய்ந்த சோளக் கருதுகள் தேவைப் படுவதுடன் நான்கு கருதுகளை 110 முதல் 120 ஷரூபாய் வரை விற்கப்படுகிறது. அந்த விலைக்கு விற்கப்படும் போது விவசாயி தனது இலக்கை இழக்கின்றார் அதற்காக அவர்கள் கூடுதலான காலத்தை செலவிட வேண்டியுள்ளது.

சோளம் கருதுகளை நன்கு உலர்த்தி அவற்றை நன்றாக நசுக்கி விதையாக்கி பின்னர் பைகளில் இட்டு கொடுக்க வேண்டும்.

எனவே விவசாயிகள் சோளச் செடிகளை கருதுகளுடன் சேர்த்து கிலோவுக்கு இருபத்தி நான்கு அல்லது இருபத்தைந்து ரூபாய்க்கு கால்நடை தீவனமாக விற்க வேண்டியுள்ளது. கால் நடை வளர்ப்பு நிறுவனங்கள் பண்ணைக்கு சென்று கிலோவுக்கு இருபத்தைந்து ரூபாய்க்கு சோள கருதுகளுடன் சோளச் செடிகளை ஏற்றிச் செல்வதாகவும் திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# புத்தளம் முந்தல் மத்தியஸ்த சபை உறுப்பினராக ஓய்வு நிலை அதிபர் எம்.எச்.எம். றாஸிக் நியமனம்

**(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)**

புத்தளம் பெருக்குவட்டானை சேர்ந்த ஓய்வு நிலை அதிபர் தேசகீர்த்தி எம்.எச்.எம். றாஸிக் (ஜே.பி) முந்தல் பிரதேச செயலக பிரிவின் மத்தியஸ்த சபை உறுப்பினராக நியமிக்கப் பட்டுள்ளார்.

நீதி அமைச்சு மற்றும் மத்திய சபைகள் ஆணைக்குழுவினால் இவருக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவினால் நடத்தப் பட்ட பயிற்சி மற்றும் பரீட்சையில் சித்தியடைந்து மத்தியஸ்த சபைக்கு நியமிக்கப் பட்டவர்களுக்கான நியமன கடிதங்களை வழங்கும் நிகழ்வு முந்தல் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.



இவர் அகில இலங்கை சமாதான நீதவானாகவும், பெருக்குவட்டான் ஜும்ஆப்பள்ளி பரிபாலன சபை உறுப்பினராகவும் செயற்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# அரசின் அதிரடி முடிவுகளால் அதிரும் அரசியல் களம்





எம்.எஸ். அமீர் ஹுசைன்

இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் இருந்து அண்மைக் காலம் வரையில் பதவியில் இல்லாத பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதிகளும் உள்ளனர். அத்தகையவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான சட்டம் நிறைவேறிய பின்னர் இருந்து இது வரையில் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது. சுமார் 500 பாராளுமன்ற உறுப்பினர்களும் 05 ஜனாதிபதிகளும் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். இவர்களது ஓய்வூதியத்தை இரத்து செய்வதற்கான திட்டத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டு வந்திருக்கின்றது. அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதோடு சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்திற்கு வர இருக்கின்றது. அது தொடர்பான அரசாங்க வர்த்தமாணி அறிவித்தல் 2025.07.31 ஆம் திகதி வெளியிடப் பட்டிருக்கின்றது. அதன்படி முன்னால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிமாருக்கும் சலுகைகளும் ஓய்வூதியமும் வழங்கப்படுவது நல்லது, அவசியமில்லை என்ற அடிப்படையில் வாதப் பிரதிவாதங்கள் உருவாகி இருக்கின்றது.

ஏற்கனவே இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் முன்வைத்த செயற்றிட்டமானது இந்த நாட்டில் அனாவசியமாக செய்யப்பட்டு வருகின்ற செலவீனங்களை இல்லாதொழித்து பொதுமக்களது பணத்தை வீணாக வாரி இறைக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் தடுத்து நிறத்துவதென்பதாகும். பாராளுமன்ற உறப்பினர்களுக்கான சுங்கத் தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவது நிறுத்தப்பட்டது. அடுத்த கட்டமாக ஓய்வு பெற்றவர்களாக எல்லை மீறிய சலுகைகளை அனுபவித்து வருகின்ற ஜனாதிபதிமாருக்கான வரப்பிரசாதங்களை நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. கொழும்பில் அரச இல்லங்களில் தங்கி இருக்கின்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட ஏனையவர் களுக்கும் அவர்களது வீடுகளை விட்டு வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டது. நீர், மின்சாரம் துண்டிக்கப்பட்டது. தொடர்ந்தும் அதே வீடுகளில் தங்கி இருக்க வேண்டுமானால் புதிதாக செய்யப்பட்ட பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

இவ்வாறாக அரச செலவீன குறைப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அந்த வகையில் தற்போது திட்டவட்டமாக முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்கா, மஹிந்த ராஜபக்ஷ, ரனில் விக்கிரமசிங்கா, மைத்திரிபால சிரிசேனா, கோதாபய ராஜபக்ஷ ஆகியோருக்கான வரப்பிரசாதங்களை இரத்து செய்வதற்கான சட்டமூலம் தயாராகி இருக்கின்றது. ஏற்கனவே இவர்களுக்கு வழங்கப்பட்ட பொலீஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டது. அதில் பாதிக்கப்பட்டவராக மஹிந்த ராஜபக்ஷ இருக்கின்றார். பொதுமக்களது பார்வையில் பதவியில் இல்லாத இத்தகைய 05 பேருக்காக 600 பாதுகாப்பு உத்தியோகத்தர்களை கொண்ட பாதுகாப்பு வசதிகள் மற்றும் அவர்களுக்கான செலவீனம், மேலதிக நேர கொடுப்பனவு என்றெல்லாம் எதற்காக வழங்க வேண்டும். எதுவுமே அவசியம் இல்லை என்ற கருத்து முன்வைக்கப் படுகின்றது. ஆனாலும் மஹிந்த ராஜபக்ஷ தரப்பில் இருந்து சொல்லப்படுகின்ற நியாயங்களும் உள்ளன. நாட்டை மீட்டெடுத்தவர், நாட்டுக்காக பாடுபட்ட மூத்த அரசியல்வாதி, அவரை கண்ணியமாக மதிக்க வேண்டும். துச்சமாக மதித்து அவமதிக்க வேண்டாம் என்றெல்லாம் நியாயங்கள் முன்வைக்கப்படுகின்றன. அத்துடன் மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர் தற்போது முன்வைக்கப் பட்டுள்ள சட்டமூலம் செல்லுபடியற்றது என்று தெரிவிக்கின்றனர். அரசியல் அமைப்பின் 36.1 முன்னாள் ஜனாதிபதிகளுக்கான ஓய்வூதியம் மற்றும் சலுகைகள் பற்றி விபரிக்கின்றது. அதே பிரிவு 36.2 இல் இந்த சலுகைகளை இல்லாதொழிப்பதற்காக எந்த சட்டமூலம் கொண்டு வந்தாலும் அது பின்னோக்கி பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் முன்னோக்கியே பாதிப்பை அல்லது தாக்கத்தை ஏற்படுத்தும் என்று குறிப்பிடுவதாக பொதுஜன பெரமுன கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கூறினார். அதனால் இந்த சட்டமூலம் நடை முறைக்கு வந்தாலும் குறித்த சட்டமூலம் நடைமுறைக்கு வந்த நாளில் இருந்து இனி வரும் காலங்களில் ஓய்வு பெறும் ஜனாதிபதிகளது ஓய்வூதியம், சலுகைகள், வரப்பிரசாதங்களை இல்லாதொழி ப்பதற்காக செல்லுபடியாகும் என்று தெரிவிக்கின்றனர். எவ்வாறாயினும் இத்தகைய சட்டமூலம் ஒன்றை கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்தமையின் பின்னணியாக அமைவது மஹிந்த ராஜபக்ஷவை பழிவாங்கும் எண்ணத்துடன் கொழும்பில் இருந்து மெதமூலனைக்கு அனுப்பவே என்று தெரிவிக்கின்றனர். அவ்வாறே பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு மாதாந்தம் 68,000 ஷரூபா ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகின்றது. அதனை இல்லாதொழிப் பதற்கு எதிராக ஓய்வுபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களது சங்கம் இந்த விடயத்தை ஜெனீவாவுக்கு கொண்டு செல்வதற்கு திட்டமிட்டுள்ளனர். அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை யானது ஓய்வு பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களது மனித உரிமை மீறல் என்று பல முன்னாள் எம்.பி. க்கள தெரிவிக்கின்றனர். இந்த ஓய்வூதியம் வெட்டப்பட்டால் அவர்களுக்கு வாழ வழி இல்லாத கஷ்டமான நிலை ஏற்படும் என்று தெரிவிக்கின்றனர். வேறு எந்தவிதமான வருமானங்களும் இல்லை என்றும் யாரிடமும் கையேந்த முடியாது என்றும் அரசாங்கம் அரசியல் ரீதியாக பழிவாக்குவதை விட்டு விட்டு இந்த ஓய்வூதிய வெட்டை நிறுத்த வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அது தொடர்பாக வர்த்தக வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க அண்மையில் கூட்டம் ஒன்றில் பேசும் போது தெரிவிக்கையில் ஓய்வூதியம் பெறும் ஜனாதிபதி மாருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வருமானத்திற்கு வழி இல்லாவிட்டால் அவர்களுக்கு ஏற்கனவே அரசாங்கம் வறிய மக்களுக்கு வழங்கி வருகின்ற மாதாந்த கொடையான அஸ்வெசும கொடுப்பனவை வழங்குவோம் என்று அறிவித்துள்ளார். சுமார் 500 பாராளுமன்ற உறுப்பினர்கள் அளவில் தொடர்ச்சியாக ஓய்வூதியம் பெறுபவர்களாக உள்ளனர். புதிதாக கொண்டு வர இருக்கின்ற சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் இவர்களது வயிற்றில் அடி விழும் என்பதில் சந்தேகம் இல்லை.

அதே நேரம் இவ்விடயம் தொடர்பாக அண்மையில் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிக்கையில் அரசாங்கம் எந்த வரப்பிரசாதங்களை வெட்டினாலும் மக்களால் வழங்கப்பட்ட வரப் பிரசாதங்கள் உள்ளன. ஆனாலும் அரசாங்கம் எதையாவது வழங்கி இருந்தால் அவற்றை எடுத்துக் கொள்ளட்டும். மாறாக கொழும்பில் இருக்கின்ற வீட்டில் இருந்து மெதமூலனைக்கு போக வேண்டிய நிலை ஏற்பட்டால் போவேன். ஆங்கு தனக்கு மிகவும் நல்ல வசதிகள் உள்ளன. பிடித்தமான பிரதேசம் என்றார். அத்துடன் கோதாபய ராஜபக்ஷ இவ்விடயம் தொடர்பாக எந்த கருத்தையும் கூற மறுத்துவிட்டார்.

# அனுராதபுர ஆஸ்பத்திரியின் மருத்துவக் கழிவுகளை அகற்றுவதில் ஊழியர்கள் சிரமம்

(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்கு தேவையான மஞ்சல் சாயப் பைகள் இல்லாததால் வைத்திய சாலை ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். சுகாதார பராமரிப்பு தொடர்பில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வரும் இந்நேரத்தில் குவாரிகள் மற்றும் வார்டுகளில் இருந்து வெளியேற்றப்படும் இந்த தொற்று கழிவுகளை அப்புறப் படுத்துவதற்கு போதுமான மஞ்சள் சாயப் பைகளை வழங்கமுடியாமல் இருப்பது ஆச்சரியமாக இருப்பதாக ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக அனுராதபுரம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ஆரியரத்ன விடம் வினவிய போது:- மஞ்சள் சாயப் பைகள் பற்றாக்குறை இருப்பதால் பொலன்னறுவை வைத்தியசாலையில் இருந்து கொண்டு வரப்படுகின்றன. மேலும் தற்போதுள்ள தரம் குறைந்த மஞ்சள் சாயப் பைகளை விட எதிர்காலத்தில் சிறந்த தரமான பைகளை கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# City of Dreams Sri Lanka - ஒரு தேசிய மாற்றத்தின் மைல்கல்





இலங்கையில் இதுவரை கட்டப்பட்ட மிகப் பெரிய முதலீட்டுத் திட்டமாகவும், தெற்காசியாவின் முதல் ஒருங்கிணைந்த ஹோட்டல் வளாகமாகவும் திகழும் “City of Dreams Sri Lanka” (COD SL) அதன் பெருமைக்குரிய பயணத்தைத் தொடங்கியது. அதன் அங்குரார்ப்பண நிகழ்வு பிரமாண்டமான விழாவுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆடம்பரமும், உள்ளூர் வடிவமைப்பும் ஒன்றிணைந்த ஒரு தனித்துவமான இடமாக இந்த ஊவைல ழக னுசநயஅள ளுசை டுயமெய, இலங்கையின் லட்சியங்கள், படைப்பாற்றல் மற்றும் உலகளாவிய தொலைநோக்குப் பார்வையின் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

இலங்கை மற்றும் சர்வதேச கலைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்திய City of Dreams Sri Lankatpன் அங்குரார்ப்பண விழா, கண்கவர் நிகழ்ச்சிகளும் உணவு விருந்து நிகழ்வுகளும் நிறைந்து விளங்கியது.

இந்த நிகழ்வின் போதே, புத்தாக்கமான அணுகுமுறைகள் மூலம் ஒரு பிரமாண்டமான அனுபவத்தை உருவாக்க முனைந்த ஊவைல ழக னுசநயஅள, நாளை முதல் வரும் வாடிக்கையாளர்களுக்கு மறக்க முடியாத சுவாரஸ்யமான அனுபவங்களை வழங்க தயாராக இருப்பதை வெளிப்படுத்தியது.

John Keels Holdings மற்றும் Melco Resorts and Entertainment - MRE ஆகியவற்றின் வலுவான கூட்டு முயற்சியின் ஒரு மிகுந்த வெற்றிகரமான திட்டமாக City of Dreams Sri Lanka அமைந்துள்ளது. இது புத்தாக்கம், தேசிய பெருமை மற்றும் உலகளாவிய அங்கீகாரம் கொண்ட ஒரு இலங்கையை உருவாக்குவதற்கான மையமாகவும் அமைந்துள்ளது.

கடந்த ஒரு வருட காலமாக, 500க்கும் மேற்பட்ட உள்ளூர் கலைஞர்கள், ஹோட்டல் நிபுணர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள், சர்வதேச வடிவமைப்பு நிபுணர்கள் மற்றும் ஆநடஉழவின் உலகளாவிய நிபுணர்களுடன் இணைந்து, ‘City of Dreams Sri Lanka’ திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற பெரும் பங்களிப்பை அளித்துள்ளனர். குறிப்பாக, சுவர்களில் கைவண்ணம் வரைந்த ஓவியங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கலைப்படைப்புகள் மூலம் இலங்கையின் திறமைகளை உலகிற்கு வெளிப்படுத்துவதோடு, ‘City of Dreams” இன் தனித்துவத்தையும் உலகத்திற்கு வெளிப்படுத்தும் வகையில் அவர்கள் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

City of Dreams Sri Lanka’ என்பது ஒரு ஆடம்பர ஹோட்டல் திட்டத்தையும் தாண்டி, இலங்கையின் திறன்கள் மற்றும் புத்தாக்கமான சின்னங்களை சிறப்பாக வெளிப்படுத்தும் ஒரு அடையாளமாகும். கொழும்பு நகரத்தின் மிகவும் கவர்ச்சிகரமான சுற்றுலா தலமாக இது எளிதாக மாறியுள்ளது. தனித்துவமான விழாக்களுக்கான ஆடம்பர வசதிகளுடன் கூடிய ‘ஊவைல ழக னுசநயஅள’, உயர் வருமானம் பெறும் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு ஈர்ப்பதோடு, உள்நாட்டு வணிகங்களின் வளர்ச்சிக்கும் தனது பங்களிப்பை வழங்க தயாராக உள்ளது.

தெற்காசியப் பிராந்தியத்தின் முதல் ஒருங்கிணைந்த ஹோட்டல் வளாகமாக, இந்தத் திட்டம் அனைத்து சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பெறும் வசதியை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. இது அவர்களுக்கு அதிகப்படியான வசதியையும் எளிமையாக்குகிறது.

587 அறைகளைக் கொண்ட Cinnamon Life மற்றும் Nūwa ஹோட்டலில் 113 அதி சொகுசு அறைகளைக் கொண்டுள்ளது. City of Dreams Sri Lanka சர்வதேச தரத்திற்கு ஈடான சேவைகளை வழங்குகிறது. Melco நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் நவீன கெசினோ மற்றும் பொழுதுபோக்கு வலயம், சர்வதேச தரநிலைகள் மற்றும் நிர்வாக முறைகளுடன் இயங்கி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு ஒப்பற்ற அனுபவத்தை வழங்க தயாராக உள்ளது.




City of Dreams, இலங்கையின் பிரபலமான சமையல் கலைஞர்களின் பங்களிப்புடன், பாரம்பரிய இலங்கை உணவு மரபுகளுடன் நவீன சுவை அனுபவங்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. இதற்காக 17 தனித்துவமான உணவகங்கள் மற்றும் டீயச வசதிகளைக் கொண்டு, புத்தாக்கமான மற்றும் உயர்தர உணவு-பான வகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

City of Dreams> அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் ஐவெநசயெவழையெட டீசயனெநன கடைகளைக் கொண்ட ஒரு ஷொப்பிங் காம்ப்ளக்ஸ் மூலம் சிறந்த தயாரிப்புகளை வாங்குவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. மேலும், இந்த வளாகம் விசேட நிகழ்வுகள், கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள் ஆகியவற்றை நடத்துவதற்கான அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது. City of Dreamsஇன் குடியிருப்பு மற்றும் அலுவலக வளாகம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு ஒரு சிறந்த வீடு அல்லது அலுவலகத்தை தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பை வழங்குகிறது, இது இதன் மற்றொரு தனித்துவமான அம்சமாகும்.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி (JKH) என்பது கொழும்பு பங்குச் சந்தையில் சந்தை மூலதனமயமாக்கலின் அடிப்படையில் பட்டியலிடப்பட்ட மிகப்பெரிய கூட்டு நிறுவனமாகும். இது 7 வெவ்வேறு தொழில் துறைகளில் 80க்கும் மேற்பட்ட நிறுவனங்களுடன் செயல்படுகிறது. 155 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட ஜோன் கீல்ஸ் குழுமம் 15,000 க்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது. மேலும், LMD பத்திரிகையால் 20 ஆண்டுகளாக இலங்கையின் ‘மிகவும் மதிக்கப்படும் நிறுவனம்’ என தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. பெருநிறுவன அறிக்கையிடல் வெளிப்படைத்தன்மை மதிப்பீட்டில், ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்காவால் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி நான்கு ஆண்டுகளாக முதலிடத்தில் உள்ளது. உலகப் பொருளாதார மன்றத்தின் முழு உறுப்பினராகவும், ஐ.நா. உலகளாவிய ஒப்பந்தத்தில் பங்கேற்பாளராகவும் இருக்கும் JKH, “நாளைக்காக தேசத்தை மேம்படுத்துதல்” என்ற தனது சமூகப் பொறுப்புணர்வு (CSR) தொலைநோக்குப் பார்வையை ஜோன் கீல்ஸ் அறக்கட்டளை மூலம் முன்னெடுத்துச் செல்கிறது.

Nasdaq Global Select Market (Nasdaq: MLCO) அமெரிக்க டெபாசிடரி பங்குகளை பட்டியலிடப்பட்டுள்ள இந்த நிறுவனம், ஆசிய மற்றும் ஐரோப்பாவில் ஒருங்கிணைந்த சுநளழசவ வசதிகளை உருவாக்கி, உரிமையாளராகவும், இயக்குநராகவும் செயல்படுகிறது. இந்த நிறுவனம் தற்போது Macauவின் Cotai மற்றும் Taipa பகுதிகளில் முறையே அமைந்துள்ள “City of Dreams’ மற்றும் ‘Altira போன்ற ஒருங்கிணைந்த சுநளழசவளகளை இயக்குகிறது. மேலும், இந்நிறுவனம் Macautpd; Taipaவில் அமைந்துள்ள ‘Grand Dragon Casino’ மற்றும் Macauவின் மிகப்பெரிய Non-Casino அடிப்படையிலான எலக்ட்ரானிக் கேமிங் இயந்திரங்களை இயக்கும் ‘Mocha Clubs’ ஆகியவற்றையும் உள்ளடக்கியது. மேலும், Macautpd; Cotai பகுதியில் சினிமா தலைப்பைக் கொண்ட ‘Studio City’ என்ற ஒருங்கிணைந்த சுநளழசவஐயும் இந்நிறுவனம் இயக்குகிறது. பிலிப்பைன்ஸில், மணிலாவின் Entertainment City Complexஇல் அமைந்துள்ள ‘City of Dreams Manila’ என்ற ஒருங்கிணைந்த சுநளழசவஐ இந்நிறுவனம் இயக்கி நிர்வகிக்கிறது. ஐரோப்பாவில், சைப்ரஸ் குடியரசின் லிமாசோலில் அமைந்துள்ள ‘City of Dreams Mediterranean’ மற்றும் சைப்ரஸின் பிற நகரங்களில் உள்ள உரிமம் பெற்ற satellite casinos (“சைப்ரஸ் கேசினோக்கள்”) ஆகியவற்றையும் இந்நிறுவனம் இயக்குகிறது. இந்த நிறுவனத்தின் பெரும்பான்மை பங்குகள் Hong Kong Exchangeஇன் மெயின் போர்டில் பட்டியலிடப்பட்டுள்ள Melco International Development Limited நிறுவனத்திற்கு சொந்தமானது. இதன் பெரும்பான்மை பங்குகளும் நிர்வாகமும் நிறுவனத்தின் தலைவர், நிறைவேற்று அதிகாரமுடைய பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. லோரன்ஸ் ஹோவிற்கு சொந்தமானது

# வெகு சிறப்பாக நடைபெற்ற உஸ்தாத் அகார் முஹம்மதின் 100 வாழ்க்கைப் பாடங்கள் நூல் வெளியீட்டு விழா













ஜாமியா நளீமியா வின் அதிபர் உஸ்தாத் ஏ.ஸீ.அகார் முஹம்மத் அவர்கள் எழுதிய 100 வாழ்க்கைப் பாடங்கள் எனும் இஸ்லாமிய அறிவு நூல் வெளியீட்டு விழா மிக சிறப்பாகவும் நேர்த்தியாகவும் 06.08.2025 பி.எம்.ஐ.சி.எச் ல் நடைபெற்றது.

நூலின் முதல் பிரதியை சம்.சம் பவுண்டேசன் தலைவர் அஷ் ஷேக் யூசுப் முப்திக்கு வழங்கப்பட்டது.

மற்றும் பௌஸ் ஹாஜி , அகார் முஹம்மத் அவர்களின் சகோதரருக்கு ஜம்இய்யதுல் உலமாவின் செயலாளர் அஷ்ஷேக் அர்ஹம் ஆகியோர்களுக்கு மட்டுமே நூல் ஆசிரியரின் மேடையில் வைத்து நூல்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு வருகை தந்த அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் தூதுவர்கள் கல்விமான்கள் , ஜாமியா மாணவர்கள் மண்டபம் நுழைவாயில் வைத்து 1500 ரூபா வழங்கி நூல் பிரதிகளை பெற்றுச் சென்றமை காணக்கூடியதாக இருந்தது.

இங்கு வரவேற்புரையை ஜாமியா நளீமியா பழைய மாணவர் அஷ்ஷேக் ராசிக் , நூலின் விமர்சனம் உரையை இஸ்லாம் மற்றும் சுகாதார விரிவுரையாற்றும் சிறுவர் வைத்திய நிபுணர் டாக்டர் ரைஸ் முஸ்தபா நூல் ஆசிரியர் ஏற்புரையையும் நிகழ்த்தினார்.

தமிழ் நாட்டுப் பேராசிரியர்கள் இரத்தன சுருக்க உரை நொலேஜ் பொக்ஸ் ஊடகத்தினால் திரையில் காண்பிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதியமைச்சர் முனீர் முளப்பர், பாராளுமன்ற உறுப்பினர்கள் ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், காதர் மஸ்தான், முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் , முன்னாள் பா. உ அமீர் அலி, எம்.எம்.சுஹைர் , பேராசிரியர் சித்தீக், ஜாமியா நளீமியா தலைவர் யாக்கூத் நளீம் மற்றும் ஜாமியா நளீமியா விரிவுரையாளர்கள் பழைய மாணவர்களும் உலமாக்களும் ஊடகவியலாளர்களும் மண்டபம் கீழ் மாடியில் மேல் மாடியில் நிரம்பிக் காணப்பட்டனர்.



# பாலஸ்தீன பட்டினி சாவு..!

# பாலஸ்தீன விடுதலை சாத்தியமா..?



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

காஸாவில் உள்ள ஐந்தில் ஒரு குழந்தை ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப் பட்டுள்ளது. மேலும் அந்த எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருகிறது என்று ஐ.நா. பாலஸ்தீனிய அகதிகள் நிறுவனம் தெரிவித்துள்ளது. காஸாவில் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. இதுவரை அறிவிக்காதபோதிலும், கடுமையான பஞ்சம் ஏற்படுவதற்கான அபாயத்தில் காஸா உள்ளது என IPC (Integrated Food Security Phase Classification) எனப்படும் ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்பு நிலை வகைப்பாடு எச்சரிக்கிறது. ஜீஊ என்பது, மக்கள் மலிவு விலை மற்றும் சத்தான உணவைப் பெறுவதில் எதிர்கொள்ளும் சிரமங்களை விவரிக்கப் பயன்படும் உலகளாவிய தரநிலை.
இதன் ஐந்தாவது கட்டம் மிகவும் மோசமானதாகக் கருதப்படுகிறது. அதாவது பஞ்சமாகக் கருதப்படுகிறது. 20% குடும்பங்கள் உணவுக்கான தீவிர பற்றாக் குறையை எதிர்கொள்வது, குறைந்தது 30% குழந்தைகள், கடுமையான ஊட்டச் சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படுவது ஆகும். 2025-ஆம் ஆண்டின் மே மற்றும் செப்டம்பருக்கு இடைப்பட்ட காலத்தில் கிட்டத்தட்ட 469,500 பேர் ஐந்தாம் கட்டத்தை அனுபவிப்பார்கள் என்று IPC கணித்தது.

காசாவில் நடைபெற்று வருகின்ற 'பசி மரணம்' என்பது மனித சமூகத்தின் அத்தியாயம் தொடங்கிய நாளிலிருந்து இது போன்ற ஒரு கொடூரமான நடவடிக்கைகள் வேறெந்த தேசத்திலும் நடைபெறவில்லை என்பதே யதார்த்தமான உண்மையாகும். அந்த அளவுக்கு 90000 மேற்பட்ட மக்கள் எலும்பும், தோலுமாக மாறி மண்ணை தின்று வாழக்கூடிய ஒரு நிலையை கண்டு உலகமே திகைத்து நிற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

காசாவில் உதவி மையமான உணவு தரும் கொந்தளிப்பை GHF பாலஸ்தீனியர்கள் விவரிக்கின்றனர் .

காசாவில் உள்ள GHF விநியோக தளங்களில் வீரர்களால் அப்பாவிகள் பலர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

பல்வேறு வகையான கொடூரமான நடவடிக்கைகள் பொதுமக்கள் மத்தியில் மிகப் பெரிய அளவிலான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் காசாவில் நடை பெறும் மனித இன சுத்திகரிப்பை உலகம் முழுமையாக ஏற்றுக் கொண்ட நிலையில் இஸ்ரேலை கண்டித்து தண்டிக்க யாரும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

குழந்தைகள், பெண்கள் மற்றும் வயது முதிர்ந்த பொதுமக்களை எந்தவொரு காரணமும் இன்றி படுகொலை செய்த முழுமையான பொறுப்பு அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டு நாடுகள் அரசியல் தலைமையே சார்ந்த ஒன்று என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

பசியால் தவிக்கும் காஸாவிற்கு 40 டன் உணவு மற்றும் மருத்துவ உதவிகளை விமானம் மூலம் அனுப்புகிறது பிரான்ஸ்.

பிரான்ஸ், இஸ்ரேலின் தடைப்பட்ட காஸா பகுதிக்கு மனிதாபிமான உதவியாக 40 டன் உணவுப் பொருட்கள் மற்றும் மருத்துவ உதவிகளை விமானம் மூலம் அனுப்ப உள்ளதாக அறிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஜோர்டானிய அதிகாரிகளுடன் இணைந்து நடைபெறும் என பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் ஜீன்-நோயல் பாரோட் தெரிவித்தார்.

வான்வழி உதவி முக்கியமானது ஆனால் போதுமானதல்ல என்றும், எல்-அரீஷ் நகரில் உள்ள 52 டன் பிரெஞ்சு உதவிகள் நிலைத்து இருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இஸ்ரேல் நிலம்வழியாக நுழைவை திறக்காவிட்டால் காஸா மக்களின் துயரம் இன்னும் தீவிரமாகும்," என்று அவர் எச்சரித்தார். இதேவேளை, பிரித்தானியா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளும் விமானம் மூலமாக காஸாவிற்கு உணவு மற்றும் மருந்துகளை வழங்கத் தொடங்கியுள்ளன.

இதற்கிடையில் காசாவில் 2 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் பசியால் உயிரிழக்கும் நிலைக்கு, பல அன்னதான அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. இஸ்ரேல் சில உதவித் தொண்டுகளை அனுமதித்தாலும், சர்வதேச அமைப்புகள் முழுமையான நிலம்வழி அனுமதி தேவை என வலியுறுத்துகின்றன.

அமெரிக்கா ஆயுதங்களை வரம்பற்ற நிலையில் யூத அரசுக்கு விநியோகம் செய்தது . யூத சியோனிச வலதுசாரி சித்தாந்தம் கொண்ட அமைச்சர்கள் மற்றும் இஸ்ரேலிய தலைவர்கள் பாலஸ்தீன மக்களை முழுமையாக அழித்து விட வேண்டும் என்பதில் உறுதியாக செயல்பட்டு வருவதைக் காண கூடியதாக இருக்கிறது. வெளிப்படையாக யூத தலைவர்கள் காசாவை இஸ்ரேலுடன் இணைக்க வேண்டும் என்று கூறி வரும் நிலையில் தற்போது பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், இங்கிலாந்து பிரதமர் கியர் டோர்மர் பாலஸ்தீனம் சுதந்திரம் அடைந்த தீர வேண்டும் என்பதை பிரகடனம் செய்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸ்பெயின், அயர்லாந்து மற்றும் நார்வே ஆகிய நாடுகள் கூட்டாக பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்துள்ளன. உலக நாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது இஸ்ரேலுக்கு மிகப் பெரிய அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது கனடா, அயர்லாந்து, ஜெர்மனி போன்ற நாடுகள் தற்போது பிரான்ஸ் உடன் இணைந்து பாலஸ்தீன பிரதேசம் சுயாதீன நாடாக மாற வேண்டும் என்று சர்வதேச அளவில் வலிமையான குரல்கள் எழுந்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

சில நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் (காஸாவையும் மேற்குக் கரைப் பகுதியையும் உள்ளடக்கிய) பாலஸ்தீன பகுதியை ஒரு தனி நாடாக அங்கீகரிக்க திட்டமிட்டுள்ளோம் என்று கனடா பிரதமர் மார்க் கார்னி கூறினார்.வரும் செப்டம்பர் மாதம் கூடவிருக்கும் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.அதற்காக, வரும் 2026-ஆம் ஆண்டில் ஹமாஸ் அமைப்பினர் பங்கேற்காத ஒரு தேர்தலை நடத்த மேற்குக் கரையில் ஆட்சி செலுத்தி வரும் பாலஸ்தீன அரசு ஒப்புக்கொள்ள வேண்டும். அத்துடன், ஜனநாயக சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் அந்த அரசு சம்மதிக்க வேண்டும் என்றார் அவர்.

முன்னதாக, பாலஸ்தீனத்துக்கு அங்கீகாரம் வழங்குவது தொடர்பான பிரகடனத்தை கனடா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஆண்டோரா, பின்லாந்து, லக்ஸம்பர்க், போர்ச்சுகல், சான் மரினோ, ஐஸ்லாந்து, அயர்லாந்து, மால்டா, நோர்வே, ஸ்லோவேனியா, ஸ்பெயின் ஆகிய 15 நாடுகள் கூட்டாக வெளியிட்டன. எனவே, அந்தப் பிரகடனத்தில் கையொப்பமிட்டுள்ள ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளும் பிரான்ஸ், பிரிட்டன், கனடாவைப் போல் பாலஸ்தீனத்துக்கு தனி நாடு அந்தஸ்து வழங்குவதற்கு விரைவில் முடிவெடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அறிவிப்புக்கு இஸ்ரேல் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. கனடாவுக்கான இஸ்ரேல் தூதர் இட்டோ மோய்ட் கூறுகையில், 'இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச அளவில் கொடுக்கப்படும் நெருக்கடிகளுக்கு நாங்கள் தலைவணங்க மாட்டோம். எங்களை அழிக்க நினைக்கும் ஒரு மதப் பயங்கரவாத நாட்டை உருவாக்க அனுமதித்து, எங்களின் இருப்பையே கேள்விக்குறி ஆக்க மாட்டோம்' என்றார்.

கனடாவின் இந்த முடிவைக் கண்டித்துள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்த விவகாரம் தொடர்பாக கனடா பொருள்கள் மீது கூடுதல் இறக்குமதி விதிக்கப்படும் என்று எச்சரித்தார்.தற்போது அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் முதன் முதலில் இஸ்ரேல் மக்களை எங்கள் நாட்டில் உள்ள மக்கள் வெறுக்கும் நிலை ஏற்படும் என்று கூறி உள்ளது மிகவும் முக்கியமான கருத்தாக உள்ளது. அமெரிக்கா குடியரசு கட்சியின் பின்னிருப்பில் காசாவில் இன சுத்திகரிப்பு நடைபெற்று வருவதாக கூறியுள்ளமை மிகவும் முக்கியமான காரணியாக உள்ளது.

அமெரிக்கா முழுவதும் பொதுமக்கள் மத்தியில் இது மிகப் பெரிய அளவிலான பதட்டம் ஏற்படுத்தி உள்ளதன் விளைவே அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தற்போதைய பேச்சின் உட்பொருளாக அமைந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் முழுமையாக காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து நடத்தி வரும் இனப் படுகொலையை எதிர்த்து பொது மக்கள் ஆர்பாட்டம் நடத்தி வரும் நிலையில் உலகம் முழுவதும் காசாவுக்கு ஆதரவான நிலை காணப்படுகிறது. இதன் மூலம் காசா ஆனது தனி பாலஸ்தீன அரசை உருவாக்கி விடும் நிலைக்கு தற்போது வளர்ச்சி அடைந்துள்ளமை மிகவும் முக்கியமான முன்னேற்றம் நிறைந்த காரணியாக இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.

இந்த நிலையில் பாலஸ்தீனத்தில் யூதக் குடியேற்றம், காஸா போரை ஊக்குவித்து வரும் தீவிர வலதுசாரிகளான இஸ்ரேல் தேசிய பாதுகாப்புத் துறை அமைச்சர் இதமான் பென்-கிவிர், நிதியமைச்சர் பெசலெல் ஸ்மோட்ரிச் ஆகியோர் நெதர்லாந்து வருவதற்கு நெதர்லாந்து அரசு பொருளாதாரத் தடை விதித்துள்ளது. ஏற்கெனவே இந்த இருவருக்கும் எதிராக பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, நியூஙஊலாந்து, நோர்வே ஆகிய நாடுகள் கடந்த மாதம் பொருளாதாரத் தடை விதித்தது நினைவுகூறத்தக்கது.

பிரான்ஸ் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அதிகாரப்பூர்வமாக செப்டம்பர் மாதத்தில் அங்கீகரிக்கும் என அந்நாட்டு அதிபர் மக்ரோங் அறிவித்துள்ளார்.

பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிக்கும் முதல் ஜி7 நாடாக பிரான்ஸ் இருக்கும். நியுயார்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் அதிகாரப்பூர்வ பிரகடனம் செய்யப்படும் என மக்ரோங் எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருக்கிறார்.

"காஸாவில் போர் நிறுத்தப்பட்டு பொதுமக்கள் மீட்கப்படவேண்டும் என்பதுதான் இன்று இருக்கும் அவசரத் தேவை. அமைதி சாத்தியம்தான். உடனடி போர்நிறுத்தம், அனைத்து பிணைக் கைதிகளும் விடுவிப்பு, காஸா மக்களுக்கு அதிக அளவு மனிதாபிமான உதவி ஆகியவை நமக்கு தேவை," என அவர் எழுதியுள்ளார். இம்மானுவேல் மேக்ரான் முடிவை பாலஸ்தீன அதிகாரிகள் வரவேற்றிருக்கும் நிலையில், 2023 அக்டோபர் 7ஆம் தேதி இஸ்ரேலில் ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்கு பின்னரான இந்த நடவடிக்கை பயங்கரவாதத்திற்கு பரிசளிப்பதைப் போன்று இருப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இந்த முடிவை "விளைவுகளை பற்றி கவலைப்படாத ஒரு முடிவு" என்று விவரித்துள்ள அமெரிக்க வெளியுறவு செயலாளர் மார்கோ ஷரூபியோ மக்ரோங்கின் அறிவிப்பை அமெரிக்கா' வலுவாக நிராகரிப்பதாக தெரிவித்தார். ஜி7 என்பது அதிக தொழில்வளர்ச்சி அடைந்த முக்கிய நாடுகளின் கூட்டமைப்பாகும். இதில் பிரான்ஸுடன் அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி, ஜெர்மனி, கனடா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உள்ளன.

இஸ்ரேல் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரிக்கவில்லை. மேற்கு கரை மற்றும் காஸாவில் பாலஸ்தீன நாடு உருவாவதை தற்போதைய இஸ்ரேல் அரசு எதிர்க்கிறது. அப்படி ஒரு நாடு உருவானால் அது இஸ்ரேலின் இருப்புக்கு அபாயமாக இருக்கும் என அது வாதிடுகிறது. "இந்த சூழ்நிலையில் பாலஸ்தீன நாடு (உருவாவது) இஸ்ரேலை அழிப்பதற்கு ஒரு தொடக்கமாக இருக்கும், அதனுடன் அமைதியாக வசிப்பதற்கு அல்ல. நாம் ஒரு விஷயத்தில் தெளிவாக இருக்கவேண்டும். பாலஸ்தீனர்கள் இஸ்ரேலுடன் ஒரு நாட்டை கேட்கவில்லை, இஸ்ரேலுக்கு பதிலாக ஒரு நாட்டை அவர்கள் கேட்கிறார்கள்," என பிரதமர் நெதன்யாகு எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தற்போது, ஐ.நா. வின் மொத்தமுள்ள 193 உறுப்பு நாடுகளில் 140க்கும் மேற்பட்ட நாடுகள் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரித்துள்ளன. இவற்றில் ஐக்கிய நாடுகள் சபையில் இருக்கும் அரபு குழுவான இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு மற்றும் அணி சேரா நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடுகளும் அடங்கும் . 2024 மே மாதத்தில் பாலஸ்தீனத்தை ஒரு நாடாக அங்கீகரித்த ஸ்பெயின், அயர்லாந்து மற்றும் நோர்வே உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளும் அவற்றில் இருக்கின்றன. அதற்கு முன்பு வெகு சில ஐரோப்பிய நாடுகள் மட்டுமே இதைச் செய்துள்ளன. அவற்றில் பெரும்பாலானவை சோவியத் ரஷ்யாவில் ஒரு அங்கமாக இருந்தபோது 1988ஆம் ஆண்டில் இதை செய்திருந்தன.

அயர்லாந்து பிரதமர் சைமன் ஹாரிஸ் இது குறித்து, "அயர்லாந்தின் இந்த முடிவு நம்பிக்கையை உயிர்ப்புடன் வைத்திருப்பது பற்றியது. காசாவில் நாம் காணும் மனிதாபிமான பேரழிவை நிறுத்துமாறு மீண்டும் இஸ்ரேலின் பிரதமர் நெதன்யாகுவை கேட்டுக் கொள்கிறேன்" என கூறினார்.

செவ்வாய்கிழமை காலை நடந்த அமைச்சரவை கூட்டத்தில் இந்த அங்கீகாரத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பல நாடுகள் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் முடிவை எடுத்தாலும், பிரான்ஸ் உள்ளிட்ட சில நாடுகள் இது சரியான நேரமாக இருக்காது எனத் தெரிவித்துள்ளன. உலக நாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது இஸ்ரேலுக்கு மிகப் பெரிய அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது சவுதி அரேபியா மற்றும் பிரான்ஸ் ஆகிய இரண்டு நாடுகள் இணைந்து பாலஸ்தீன பிரதேச விடுதலை குறித்து கருத்தொற்றுமை அடிப்படையில் புதிய பிரகடனம் செய்து உள்ள நிலையில் உலகம் முழுவதும் பொதுமக்கள் மத்தியில் மிகப் பெரிய அளவிலான குரல் காசாவுக்கு ஆதரவான நிலை ஏற்பட்டுள்ளது மிகவும் முக்கியமான தருணமாக அமைந்துள்ளது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் பாலஸ்தீன விடுதலை மற்றும் நிரந்தர போர் நிறுத்தம் ஆகியவை குறித்து இன்னும் எத்தனை நீண்ட தொலைவு அந்த மக்கள் பயணிக்க வேண்டும் என்பதை யாராலும் உறுதியாக கூற முடியாது என்பதே இன்றைய நிலையாகும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

# ஊடகத்துறையில் பாரிய பங்களித்த வானொலி முஸ்லிம் சேவை

(நேர் கண்டவர்: எம்.எஸ்.எம்.ஸாகிர்)

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையில் 1000 ஆவது ஜும்ஆ பிரசங்க நிகழ்ச்சியின் ஆரம்பம் மற்றும் அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சியின் மீளாரம்பம் பற்றி ஆங்கில சேவையின் முன்னாள் கட்டுப்பாட்டாளர் மாவனல்லை எம்.எச்.எம். தாஸீம் அவர்களுடனான நேர் காணல்...**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் ஜு/ம்ஆ குத்பா நேரடி நிகழ்ச்சியின் 1000 ஆவது நிறைவு விழா அண்மையில் கொழும்பில் கொண்டாடப்பட்டது. கொழும்பு முஸ்லிம் கல்வி முன்னேற்ற சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த விழாவில் மேற்படி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததில் பங்களிப்புச் செய்தவர்கள் பலர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

நீங்களும் இந்நிகழ்வின் போது கௌரவிக்கப் பட்டீர்கள். ஆங்கில சேவையில் கடமை புரிந்த நீங்கள் முஸ்லிம் சேவையில் நேரடி குத்பா ஒன்றை ஏற்பாடு செய்வதற்கு எந்தவகையில் பங்களிப்புச் செய்தீர்கள் என்பதைக் கூற முடியுமா? ஏனெனில், இந்த நேரடி நிகழ்ச்சியானது முஸ்லிம் சேவையைப் பொருத்தவரையில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்ச்சியாகவே நாங்கள் காண்கின்றோம்.

**உங்களைப் பற்றிக் கூறுங்கள்?**

நான் முஹம்மத் ஹனீபா முஹம்மத் தாஸீம். அரனாயக்கவை பிறப்பிடமாகவும் மாவனெல்லையை வசிப்பிடமாகவும் கொண்டுள்ளேன்.

எனது ஆரம்பக் கல்வியை திப்பிடிய முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை மானவல்லை ஸஹிரா தேசிய பாடசாலையிலும் Diploma in Advanced English பாட நெறியை கொழும்பு பல்கலைக் கழகத்திலும் கற்றேன்.

**கேள்வி : இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் ஜும்ஆ குத்பா நேரடி பிரசங்க நிகழ்ச்சி பற்றி கூறுங்கள் ?**

கொழும்பு கொள்ளுப்பிட்டி ஜும்ஆ மஸ்ஜிதில் இருந்து நேரடியாக ஒலிபரப்பாகும் குத்பா பிரசங்கத்தின் 1000 ஆவது நிகழ்ச்சியின் ஆரம்பம் பற்றி சொல்வதென்றால், 2005 ஆம் ஆண்டு ஒருநாள் கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையைச் சேர்ந்த மர்ஹும் அல்ஹாஜ் கலீல் அவர்கள் உட்பட மூவர் மேற்படி ஜும்ஆ குத்பா நிகழ்ச்சியை கொள்ளுப்பிட்டி பள்ளியில் இருந்து முஸ்லிம் சேவையில் நேரடியாக ஒலிபரப்புவது பற்றி கலந்தாலோசிக்க வந்தனர். அப்பொழுது சகோதரர் நூராணியா ஹஸன் அவர்கள் பணிப்பாளராக கடமை புரிந்தார். மேற்படி விடயம் குறித்து முஸ்லிம் சேவைப் பிரிவினர் சந்தைப்படுத்தும் பிரிவுடன் கதைத்த பொழுது ஏதோ சில காரணங்களினால் அனுமதி மறுக்கப்பட்டது. ஏற்கனவே அல்ஹாஜ் முனவ்வர் அவர்கள் கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல் நிர்வாகத்துடன் கதைத்திருந்த பொழுதிலும் சந்தைப்படுத்தல் பிரிவின் அனுமதி இன்றியமையாத ஒன்றாக இருந்தது. இவ்வேளையில் இது சம்பந்தமாக Ideal Enterprise நிறுவனம் முன்வந்து சந்தைப்படுத்தல் மேலதிகாரிகளைச் சந்தித்து இந்நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்த்தியது. இந்நிகழ்ச்சியின் மூலம் பெண்களும் ஜும்ஆ குத்பா நிகழ்ச்சியை வீட்டிலிருந்து கேட்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்றும், இதனைத் அடுத்துள்ள ஒலிபரப்பு நேரங்களையும் சந்தைப்படுத்தும் வாய்ப்புக்கள் உருவாகும் என்றும் விளக்கிய பொழுது இந்நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்கப்பட்டது. வாராந்தம் ரூபாய் 7000.00 கட்டண அடிப்படையில் வெள்ளிக் கிழமை பி.ப. 01.00 மணி முதல் 01.45 வரை நேரடி ஒலிபரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ். இந்நிகழ்ச்சியின் நேரடி ஒலிபரப்பு கொள்ளுபிட்டி ஜு/ம்ஆ பள்ளிவாசலில் இருந்து 09.12.2005 ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது நேரடி ஜும்ஆ குத்பா நிகழ்ச்சி அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி அவர்களால் நிகழ்த்தப்பட்டது. அல்ஹாஜ் எம். இஸட். அஹமட் முனவ்வர் மற்றும் அல்ஹாஜ் எஸ். எச். எம். நீஸா ஆகியோரின் தயாரிப்பில் நிகழ்ச்சி ஒலிபரப்பானது. முதல் குத்பா தினம் நானும் அங்கு சென்றிருந்தேன். பள்ளிவாசலின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் உட்பட அனைவரும் மிக்க சந்தோஷப்பட்டனர். துஆ செய்தார்கள். இந்நிகழ்ச்சிக்குந் தொடர்ச்சியாக அனுசரணை வழங்கிவரும் அல்ஹாஜ் முஸ்லிம் ஸலா/ஹத்தீன் அவர்கள் உட்பட அனைத்து வர்த்தகப் பெருமக்களுக்கும் அல்லாஹ் அருள் புரிய வேண்டும். பிந்திய காலங்களில் தென்னிந்திய நேயர்களின் வேண்டுகோளுக்கி ணங்க விசேட அலைவரிசை ஒன்றின் மூலம் அனுசரணை நிகழ்ச்சியாக தென்னிந்தியாவிற்கும் ஒலிபரப்பப்பட்டது.

**கேள்வி: நீங்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் எப்போது இணைந்தீர்கள் ?**

பதில்: 1977.02.07 இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிர்வாகப் பிரிவில் இணைந்து, சிறிது காலத்தின் பின்னர் ஆங்கில சேவைக்கு இடமாற்றம் பெற்றேன். உண்மையில் எனக்கு முஸ்லிம் சேவைக்குத்தான் இடமாற்றம் கிடைக்கும் என எதிர்பார்த்தேன். ஏனெனில், நான் ஏற்கனவே ஒரு முஸ்லிம் சேவைப் பிரியன். இலங்கை வானொலிக்கு இணைவதற்கு முன்பே அங்கு கடமைபுரியும் அனைவரைப் பற்றியும் அறிந்திருந்தேன். விசேடமாக அன்று ஒலிபரப்பாகி வந்த நாடகம், அறிவுக்களஞ்சியம், மாதர் மஜ்லிஸ், முஸ்லிம் உலகச் செய்திகள் போன்ற நிகழ்ச்சிகளைத் தவறாமல் கேட்பதுண்டு. ஆங்கில சேவையைப் பொருத்தவரை அது ஒரு Entertainment நிகழ்ச்சிகள் அதிகமாக உள்ள ஒரு சேவையாகும். ஏனைய சேவைகளைப் போலவே ஆங்கில சேவையிலும் அரசியல் மற்றும் சமகால நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகி வந்தன. அனைத்து சமயங்களுக்கும் நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. வெள்ளிக்கிழமை இரவு 8:00 மணி முதல் 8:30 வரை Culture of Islam நிகழ்ச்சி ஒலிபரப்பாகி வந்தது. உண்மையில் இன்று முஸ்லிம் சேவை தமிழ் சேவையின் கீழ் ஓர் அலகாக இயங்குவது போல அன்று முஸ்லிம் சேவையானது ஆங்கில சேவையின் நிர்வாகத்தின் கீழ்த்தான் இயங்கியது. அதனால் முஸ்லிம் சேவையுடன் நெருங்கிய தொடர்பு எனக்கு இருந்தது.

1994 இல் ஆங்கில சேவையில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றேன். பல்வேறு ஆங்கில நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. Culture of Islam, Spot Light, Thoughts for the Day, Matters that concern you, Outlook, Schools in action, Special Ramazan Programme, Hajj Festival Programmes, Endangered Environment, Special Interviews போன்ற நிகழ்ச்சிகளை நான் தயாரித்து வழங்கினேன். இதில் Culture of islam என்ற நிகழ்ச்சிதான் ஆங்கில சேவையில் ஒலிபரப்பான ஒரே முஸ்லிம் நிகழ்ச்சி. ஏனைய சமயங்களுக்கும் இவ்வாறே 30 நிமிடங்கள் வாராந்தம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் இந்நிகழ்ச்சிக்கு 15 நிமிடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. 1994ஆம் ஆண்டு முதல் இந்நிகழ்ச்சி 30 நிமிடங்கள் நேர அதிகரிப்பு செய்யப்பட்டது. அந்நிகழ்ச்சியில் இஸ்லாம் சம்பந்தமான சமகால விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. மர்/ஹும் டாக்டர் எம்.ஏ.எம்.சுக்ரி, ஜனாதிபதி சட்டத்தரணி ஜாவிட் யூசுப், தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில், டாக்டர் மரீனா றிபாய் போன்றோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுபத்தாபன முன்னாள் செய்தி ஆசிரியர் உஸ்மான் மீரகனி அவர்கள் நிகழ்ச்சிக்கான ஆக்கங்களைத் தயாரித்து வழங்கி இந் நிகழ்ச்சிக்கு பெரும் பங்களிப்பு வழங்கினார். கொழும்பு YMMA> Center for Islamic Studies (CIS), Sir Backir Markar Center for Peace, Muslim Media Forum, Al Muslimaath மாதர் அமைப்பு போன்ற அமைப்புக்களுடன் தொடர்பு வைத்திருந்ததுடன், அந்நிறுவனங்கள் சமூகத்திற்கு வழங்கும் பல்வேறு சேவைகளை ஆங்கில சேவையிலும் சமகாலத்தில் ஒலிபரப்ப முடிந்தது. விசேடமாக CIS போன்ற அமைப்புக்கள் மூலம் இலங்கைக்கு வரவழைக்கப்பட்ட பல்வேறு சன்மார்க்க அறிஞர்களை ஆங்கில சேவையில் நேர்காணல் செய்து ஒலிபரப்பக் கிடைத்தமை பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன். Dr. Zakir Naik, Mohamed Shafi (Canada), Won Denfer, Yoosuf Islam, Sheikh Muradh, Brother Abdul Rahman Green, Dr. Jamal Badavi, Dr. Kalid Al Mansoor போன்ற பலரை ஆங்கில சேவையின் மூலம் அறிமுகம் செய்தமையைக் குறிப்பிடலாம்.

1996 ஆம் ஆண்டு Dr. Zakir Naik இலங்கை வந்த போது ஆங்கில சேவையின் நேர்காணல் நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. சமகால இஸ்லாமிய விடயங்களைப் பற்றியதாக அந்த நேர்காணல் அமைந்தது. ஆங்கில சேவையின் அந்நாள் பணிப்பாளர் நிஹால் பாரதி அவர்கள் அன்னாரைப் பேட்டி கண்டார். பேட்டி விறுவிறுப்பாக அமைந்தது. பேட்டி முடிந்ததும் எம்மை பிரிந்து செல்லும் போது அவர் கூறிய வார்த்தைகள் இன்றும் என் மனதில் நினைவில் உள்ளது. உங்களுக்கு இந்நாட்டில் தேசிய ஊடகம் ஒன்றில் கடமை புரியும் வாய்ப்பு கிடைத்தமையானது அல்லாஹ்வின் மாபெரும் அருளாகவே நான் காண்கின்றேன். எனவே உங்களுக்கு சமூகத்தைப் பற்றிய பாரிய பொறுப்பு உள்ளது என்பதை மறந்து விட வேண்டாம் என்றார்கள்.

**கேள்வி : அன்றைய முஸ்லிம் சேவையைப் பற்றிக் கூற முடியுமா?**

**பதில்:** அன்று முஸ்லிம் சேவை இரவு 08.00 மணி முதல் 09.00 மணி வரை ஒரு மணி நேரம் நிகழ்ச்சியாக ஒலிபரப்பாகி வந்தது. வேறு எந்தவொரு வானொலிச் சேவையும் இல்லாத காலமது. அனைவரும் முஸ்லிம் சேவையைத் தவறாமல் கேட்பதுண்டு. சமூகத்தின் தேவை கருதி முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளரகாக சேவையாற்றிய மர்ஹூம் வீ.ஏ. கபூர் அவர்களும், கட்டுப்பாட்டாளர் மர்ஹூம் இஸட். எல். எம். முஹம்மத் ஹாஜி அவர்களும் இணைந்து வடிவமைத்த நிகழ்ச்சிகள் முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகின. அப்போது சுமார் 18 பேர் முஸ்லிம் சேவையில் கடமையாற்றியமை எனக்கு இன்னும் நினைவிருக்கின்றது.

**கேள்வி : அறிவுக் களஞ்சியம் நிகழ்ச்சி பற்றி?**


**பதில்:** மாணவர்களின் பொது அறிவு திறன், அன்றாட இஸ்லாமிய அறிவினை மேம்படுத்தும் நோக்கில் 1972 ஆம் ஆண்டில் முன்னாள் முஸ்லிம் சேவைப் பணியாளர் மர்ஹூம் வீ.ஏ.கபூர் அவர்களினால் வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சிதான் அறிவுக் களஞ்சியம் என்ற நிகழ்ச்சி. சகோதரர் ராவுத்தர் நெய்னா முஹம்மத் அவர்களினால் அழகுறத் தொகுத்து வழங்கப்பட்ட இந்நிகழ்ச்சி ஒரு ஜனரஞ்சக நிகழ்ச்சியாக நீண்டகாலம் ஒலிபரப்பாகி வந்தது. நீண்ட காலமாக இரவு முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகி வந்த இந்த நிகழ்ச்சி 1990 ஆம் ஆண்டளவில் கூட்டுத்தாபனத்தினால் இடைநிறுத்தப்பட்டது. பெரும்பாலான நேயர்களைக் கவலைக்குள்ளாக் கியது. இதனை மீள ஆரம்பிக்க அன்றைய முஸ்லிம் சேவையினால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் கூட்டுத்தாபனத்தின் நிதிப் பற்றாக்குறை இதற்கு இடங்கொடுக்கவில்லை என்று தான் கூற வேண்டும்.

**கேள்வி : ஏன் இடைநிறுத்தினார்கள் என்பதைக் கூறமுடியுமா?**

**பதில்:** 1990 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் தனியார் வானொலிகள் ஆரம்பிக்கப்பட்டதும் கூட்டுத்தாபனத்தின் வருமானம் வெகுவாக சரியத் தொடங்கியது. அப்பொழுது செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக கலைஞர்களுக்கான கொடுப்பனவுகள் (Artist Payments) நிறுத்தப்பட்டன. பணச் செலவில் தயாரிக்கப்பட்டு வந்த மேற்படி அறிவுக் களஞ்சியம் நிகழ்ச்சியும் இடைநிறுத்தப்பட்டது. இந்தக் கட்டத்தில் கூட்டுத்தாபனத்தின் வருமானத்தை சீர் செய்ய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அன்றைய சந்தைப்படுத்தும் பணிப்பாளராகவும், கணக்காய்வாளராகவும் கடமைபுரிந்த என்.எஸ். சிவராஜா அவர்களின் முயற்சி பாராட்டத்தக்கது. அவர் மேற்கொண்ட சில அதிரடி முயற்சிகளை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

1. கூட்டுத்தாபனத்தின் நிரந்தர ஊழியர்களும், விளம்பரம் சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். இதற்கு முன்பு கூட்டுத்தாபன ஊழியர்கள் விளம்பர நடவடிக்கைகள் ஈடுபடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்தது.
2. விளம்பரக் கட்டணங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டன.
3. சுமார் 50 பேர்கள் அடங்கிய Productivity குழுவொன்று ஊழியர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குத் தேவையான பயிற்சிகள், கருத்தரங்குகள், சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு ஊக்குவிக்கப்பட்டனர்.

இக்குழுவில் முஸ்லிம் சேவையிலிருந்து நண்பர் அஹமட் முனவ்வர் அவர்களும், ஆங்கில சேவையிலிருந்து நானும் உள்வாங்கப் பட்டிருந்தோம். கூட்டத்தாபனத்தின் வருமானத்தை அதிகரிக்கும் வழிவகைகளைக் காண்பதே இக்குழுவின் இலக்காக இருந்தது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஒரு நாள் என்.எஸ். சிவராஜா அவர்களை நான் எதேட்சையாக சந்தித்த போது முஸ்லிம் சேவையில் நீண்ட காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த அறிவுக் களஞ்சியம் நிகழ்ச்சியை மீள ஆரம்பிப்பது பற்றிக் கதைத்த போது அதனை அவரும் வரவேற்றார். இந்நிகழ்ச்சிக்கு அனுசரணையாளர் களை இணைக்க முடியுமாயின் காலை நேரத்தில் ஒலிபரப்ப ஏற்பாடு செய்ய முடியும் என்றும் கூறியதுடன், அதற்கான ஒரு Package Iயும் வழங்கினார். அது மட்டுமன்றி மேலும் அனுசரணையாளர்களை இணைக்க முடியும் என்றால் காலை வேளையில் மேலும் நேரம் ஒதுக்க முடியும் என்றும் கூறியது இன்னும் நினைவில் இருக்கின்றது. அதற்காக நாங்கள் பல அனுசரணையாளர்களை அனுகினோம். அன்று அனுசரணையாளர்களை கூட்டுத்தாபனத்துடன் இணைப்பதென்பது கடினமான வேலையாக இருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் அனுசரணையாளர்களைத் தேடுவதில் மாவனல்லையில் இயங்கி வந்த Ideal Enterprise & Academy எனும் நிறுவனம் பெரும் பங்களிப்பைச் செய்தது. கண்டி மற்றும் மாவனல்லைப் பிரதேசங்களிலிருந்து அனுசரணையாளர்களை இணைத்ததுடன், அந்நிறுவனம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒரு விளம்பர முகவராகவும் தன்னைப் பதிவு செய்து கொண்டது. இந் நிறுவனத்தின் பணிப்பாளர்களாக நண்பர் எம்.



ஆர்.ஏம். நியாஸ் மற்றும் எனது சகோதரர் எம்.எச்.எம். வஸீர் ஆகியோருக்கு நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

1999 ஆம் ஆண்டு முதலாவது அறிவுக் களஞ்சியம் நிகழ்ச்சியை ஆரம்பிப்பதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்தது இந்த விளம்பர நிறுவனமே. முதலாவது அறிவுக் களங்சியம் நிகழ்ச்சி ஒலிபரப்பு 1999 ஆம் ஆண்டு (திகதி நினைவிலில்லை) ஞாயிற்றுக் கிழமை காலை 08.30 மணிக்கு ஒலிபரப்பானது. இந்நிகழ்ச்சி ஒலிபரப்பாவதற்கு அந்நான் முஸ்லிம் சேவை பணிப்பாளர் மர்ஹூம் நூராணியா ஹஸன் அவர்களின் பங்களிப்பும் மகத்தானது. இந்த நிகழ்ச்சியே காலை நேர முஸ்லிம் நிகழ்ச்சியின் முதலாவது நிகழ்ச்சியாகும். ஆரம்பத்தில் நண்பர் அஷ்ரப் சிஹாப்தீன் அவர்கள் தொகுத்து வழங்கி வந்தார். 2000 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக மர்ஹூம் ஏ.ஆர். எம்.ஜிப்ரி அவர்கள் அழகுறத் தொகுத்து வழங்கி வந்தார். இந்த நிகழ்ச்சியின் பின்னர் முஸ்லிம் சேவையில் மாதர் மஜ்லிஸ், மஜ்லிஸுஸ் சூரா, கருத்துக்களம், எங்கள் பாடசாலை, ரமழான் கால விசேட ஒலிபரப்பு நிகழ்ச்சிகள், ஐவேளை அதான் ஒலிபரப்பு, அஹதியாவின் அறிவுப் பூங்கா போன்ற நிகழ்ச்சிகள் முஸ்லிம் சேவையில் ஆரம்பிக்கப்பட்டன. தொடர்ச்சியாக இந்நிகழ்ச்சிகள் ஒலிபரப்புவதற்கு மேற்படி நிறுவனம் அன்று முதல் இன்று வரை பங்களிப்புச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இன்று கூட்டுத்தாபனத்திற்கு சிறந்த வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் ஒரு சேவையாக இந்தக் காலை நேர முஸ்லிம் நிகழ்ச்சி நிகழ்கின்றது என்றால் மிகையாகாது.

இன்று கால் நூற்றாண்டை எட்டிப் பிடித்துள்ள அறிவுக் களஞ்சியம் நிகழ்ச்சி இதுவரை மூன்று தேசிய மட்டத்திலான இறுதிப் போட்டிகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. 2001 ஆம் ஆண்டு கொழும்பு BMICH இலும், 2005 ஆம் ஆண்டு கொழும்பு ஸஹிராக் கல்லூரியிலும், 2012 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆனந்த சமரகோன் கலையகத்திலும் விமர்சையாக நடாத்தப்பட்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இறுதியாக 2017 ஆம் ஆண்டு மர்/ஹும் ஏ.ஆர்.எம். ஜிப்ரி அவர்களது பாடசாலையான பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட அறிவுக் களஞ்சியம் நிகழ்ச்சி 09 மாகாணங்களிலும் போட்டிகளை நிறைவு செய்து அதன் தேசிய மட்டத்திலான இறுதிப் போட்டியை மிக விரைவில் கொழும்பில் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. கடந்த 20 வருடங்களாக தொடர்ச்சியாக இந்நிகழ்ச்சிக்கு அனுசரணை வழங்கி வரும் கொழும்பு 09 இஸ்லாமிக் புக் ஹவுஸ் நிறுவனத்திற்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஜிப்ரி அவர்களின் இழப்பு அறிவுக் களஞ்சிய நேயர்களுக்கு மட்டுமன்றி, கல்வித்துறை, ஊடகத் துறைக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அல்லாஹ் அன்னாரின் சேவைகளை ஏற்று மேலான சுவன பாக்கியத்தை வழங்குவானாக ஆமீன்.

நிகழ்ச்சியின் ஆரம்பத் தயாரிப்பாளர்களான மர்ஹூம் எம்.எம்.இர்பான். அல்ஹாஜ் எம்.எச்.எம். ஹாரிஸ் மற்றும் சகோதரர் எம்.இல்லியாஸ் ஆகியோரையும் இவ்விடத்தில் நன்றியுடன் நினைவு கூற வேண்டும். ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் மறைவின் பின்பு தற்பொழுது இந்நிகழ்ச்சியை சகோதரர் அல்ஹாஜ் எம்.ஏ.எம். ரழீம் அவர்களின் தயாரித்து வழங்க, சட்டத்தரணி இஸ்மாயில் பீ மஹ்றிப் நடாத்தி வருகின்றார்.

**கேள்வி : முஸ்லிம் சேவை வர்த்தக மயமாக்கப்பட்டுள்ளது என்று பரவலாகப் பேசப்படுகின்றதே. இது பற்றி...?**

**பதில்:** உண்மையில் எந்த ஊடக நிறுவனமும் விளம்பரங்கள் இன்றி வாழ முடியாது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அன்று கூட்டுத்தாபனம் முகங்கொடுத்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் என்.எஸ்.சிவராஜா அவர்களின் வழிகாட்டலில் இயங்கிய அந்த Productivity குழுவின் முயற்சி கூட்டுத்தாபனம் மீண்டும் பழைய நிலைமைக்கு வருவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. சில காலங்களில் விளம்பரங்கள் அதிகரிப்பதும், சில காலங்களில் குறைவதும் சகஜம். விளம்பரங்களுக்காக அன்றாட வழமையான நிகழ்ச்சிகள் ஏதும் இரத்துச் செய்யப்படுவதில்லை என்பதை நேயர்கள் அறிவீர்கள். அன்று இந்தக் நேர நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டிராவிடின் முஸ்லிம் சேவை இன்றும் ஒரு மணி நேரத்திற்குள்ளேயே முடங்கியிருக்கும் என நினைக்கின்றேன். அன்று இரவு நேர முஸ்லிம் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு முஸ்லிம் சேவையில் 18 பேரளவில் கடமை புரிந்தனர். இன்று நான்கு மணி நேர நிகழ்ச்சியை வழங்க 05 நிரந்தர ஊழியர்களே உள்ளனர் என்பது கவலைக்குரிய விடயமாகும். முஸ்லிம் சேவையில் பாரிய ஆளணிப் பற்றாக்குறையொன்று நிகழ்கின்றது. அதேபோல் நாட்டின் பல பகுதிகளிலும் முஸ்லிம் நிகழ்ச்சிகள் ஒழுங்காகக் கேட்பதில்லை என்ற விமர்சனமும் உண்டு. இது பற்றி புத்திஜீவிகளினதும், அரசியல்வாதிகளினதும் கவனத்திற்கு முன்வைக்க விரும்புகின்றேன். எப்பகுதிகளில் தெளிவில்லையோ அப்பகுதி நேயர்கள் கூட்டுத்தாபனத்திற்கு நேரடியாக எழுதுவதன் மூலமோ, கட்டுப்பாட்டுப் பிரிவைத் தொடர்பு கொள்வதன் மூலமோ தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

முஸ்லிம்களுக்கென்று தனியான ஊடகம் ஒன்று இல்லாத இக்காலகட்டத்தில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையானது சமூகத்தின் அறிவு, ஆத்மீக மேம்பாட்டை நோக்காகக் கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றது. பாடசாலை மாணவர்கள், பெண்கள், வர்த்தகப் பெருமக்கள், சிறார்கள் போன்ற அனைத்து தரப்பினர்களினதும் தேவை கருதி பல்வேறு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகி வருவதை நேயர்கள் அறிவீர்கள். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது 100 ஆவது அகவையில் கால் பதிக்கும் இந்த வேளையில் பல சிரமங்களுக்கு மத்தியிலும் முஸ்லிம் சேவை வீறுநடை போடுகின்றது என்றால், அதற்கு அல்லாஹ்வின் அருளும் உலமா பெருமக்கள் மற்றும் பல்துறை சார் புத்தி ஜீவிகளின் பங்களிப்பும் முஸ்லிம் சேவையின் ஊழியர்களின் கடின உழைப்பும், அந்தச் சேவையைத் தலைமை தாங்கி வழிநடாத்தி வரும் சகோதரி றினோஸியாவின் தூர நோக்குமே காரணம் எனலாம். இவர்களது மேலான சேவைகள் தொடர வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக.

**கேள்வி: ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இருந்து ஓய்வு பெற்றிருக்கும் நீங்கள் ஊடகவியலாளர்களுக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

**பதில்:** 2008 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் இருந்து ஓய்வு பெற்றாலும் என்னாலான பங்களிப்புக்களை முஸ்லிம் சேவைக்கு வழங்கி வருகின்றேன். நான் ஏற்கனவே கூறியது போன்று இன்றும் முஸ்லிம் சேவையில் அபிமானியாகவே இருக்கின்றேன்.

நிகழ்ச்சிகளை அவதானித்துக் கொண்டே இருக்கின்றேன். நல்ல பல நிகழ்ச்சிகளை அன்றாடம் வழங்கும் முஸ்லிம் சேவை நிகழ்ச்சிகளை அனைவரும் தவறாது கேட்டு பயனடைய வேண்டுமென்பதே எனது அவா. இறுதியாக ஊடகவியலாளர் நண்பர்களுக்கு நான் என்ன சொல்வதென்றால், நீங்கள் ஈமானிய உணர்வுடன் உங்கள் ஊடகப் பணியை தொடருங்கள். அதற்காக நீங்கள் ஏதாவது ஓர் இஸ்லாமிய அமைப்பில் இணைந்து செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

எனது சேவைக்காலத்தில் என்னால் முடிந்த பல சேவைகளை சமூக மேம்பாட்டிற்காக ஆற்ற கிடைத்ததை பாக்கியமாகவே கருதுகின்றேன். ஏனெனில், நாம் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள், சமூகத்தின் மேம்பாட்டுக்காக ஒவ்வொரு தனி மனிதனும் தன்னாலான பங்களிப்பை வழங்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

வஸ்ஸலாம்.

## மனநலமும் ஆலோசனையும் 83

# பரீட்சைக்கு தயார்..?

அன்பின் பெற்றார்களே!

ஐந்தாம் தர புலமை பரீட்சைக்கு தயாராகி இருக்கும் எங்கள் பிள்ளையின் உள உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தி தைரியமாக பரீட்சைக்கு முகம் கொடுக்க ஊக்கம் கொடுக்கும் நேரம் இது...

எனவே இந்த நேரத்தில்....

பெற்றோராகிய நாம்..

அமைதியாக செயல்படுவோம்..!

நிதானமாக இருப்பதை பிள்ளைகளுக்கு உணர்த்துவோம்..!

- பிள்ளையுடன் பேசும் போது அவசரப்படாமல் அழகாக, தைரியமாக பேசுவோம்..

கோரிக்கைகளை தவிர்த்துக் கொள்வோம்.

- நீ எப்படியோ சித்தியடைய வேண்டும் என்றோ,

நீ சித்தியடைவது தான் எங்கள் எதிர்பார்ப்பு என்றோ அல்லது சித்தியடைய வேண்டும் என்பதற்காக ஏதாவது முறையில் வேண்டுகோள்கள் மற்றும் அழுத்தங்கள் கொடுப்பது நல்லதல்ல.

நாளை பரீட்சை என்பதால் நீண்ட நேரத்தை படிப்பில் செலவிடுவதை குறைத்து பிள்ளை ஓய்வாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதற்கு வாய்ப்பு கொடுப்பது நல்லது.

மனச்சோர்வை புரிந்து கொள்வோம்.

பிள்ளை மனச் சோர்வாக இருக்கக் கண்டால் அவசரப்பட்டு பொருத்தமற்ற எதனையும் சொல்லிவிடாமல்....

- பிள்ளை செய்வது அதற்குப் போதுமானது என்பதை தெரியப்படுத்துவோம்.

- மற்றவர்களுடன் போட்டியிடுவதற்காக நீங்கள் படிப்பதில்லை. உங்கள் திறமையை வெளிப்படுத்தவும் அதை காணவுமே படிக்கிறீர்கள் என்று எடுத்துக்கூறுவோம்.

நேர்மறையான சுய எண்ணங்களை உருவாக்க உதவுவோம்.

உதாரணமாக.....

- நான் புத்திசாலி..

- இந்தப் பரீட்சையில் நான் சிறப்பாக செயற்படுவேன்..

- நான் படித்திருக்கிறேன்..

- எனக்கு பதில்கள் தெரியும்..

- என்னால் தைரியமாக பரீட்சைக்கு முகம் கொடுக்க முடியும்..

என்று சொல்லுமாறு சொல்லிக்கொடுப்போம்.

உங்கள் நல்ல சிந்தனையால் மட்டுமே நீங்கள் வெற்றியாளராக ஆகுவீர். அதனால்

- என்னால் முடியும்...!

- நான் சாதிப்பேன்..!

என்ற எண்ணங்களை மனதிற்கு கொண்டுவருமாறு எடுத்துக்கூறலாம்.

ஒப்பிடுவதை தவிர்த்துக் கொள்வோம்

பிள்ளையை மற்றப்பிள்ளையோடு ஒப்பிடுவதை முற்றாக தவிர்த்துக் கொள்வதுடன் பிள்ளைக்கும் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டாம் என்பதை எடுத்துச் சொல்வோம். மற்றப் பிள்ளைகள் எப்படிச் செய்வார்கள் என்று எண்ணுவதை விட்டு, உங்கள் திறன்கள் மீது அவதானம் செலுத்துங்கள் என்றும் சொல்லிக் கொடுப்போம்.

இப்போது கிடைத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி உங்களால் முடிந்தவரை முழுமையாகச் செய்ய முயற்சியுங்கள் என்று ஊக்கம் கொடுப்போம்..

உறக்கமும் ஓய்வும்

இந்த நேரத்தில் பிள்ளைக்கு உறக்கமும் ஓய்வும் கட்டாயம் தேவை. பூரணமான உறக்கத்திற்கு நேரத்தை ஒதுக்கிக்கொடுப்போம்.

பிள்ளைக்கு 7-8 மணித்தியாலம் உறங்க அவகாசம் கொடுப்போம்.

அழகாக ஆரோக்கியமாக உறங்கினால் பரீட்சை எழுதும் போது உடலும் உள்ளமும் சுறுசுறுப்பாக இயங்கும் என்பதை இரவில் நினைவு படுத்துவோம்.

பிள்ளையின் தலை தடவி பிரார்த்தனை செய்து..

நெற்றியில் ஒரு முத்தமிட்டு பரீட்சைக்கு அனுப்புவோம்.

அது பிள்ளைக்கு நம்பிக்கையை கொடுக்கும்.

உங்கள் பிள்ளை மன உறுதியுடன் பரீட்சைக்கு முகம் கொடுக்க நாம் பிரார்த்தனை செய்கிறோம்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# இலங்கையில் 11,000 சிறு அளவு மீன் வளர்ப்புக் குடும்பங்களை வலுவூட்டும் பிராந்திய 'AquaLivelihood' திட்டம் ஆரம்பம்

தெற்காசியப் பிராந்தியத்தில் சிறிய மீன் வளர்ப்பாளர்களை வலுவூட்டுவதையும், போசாக்குப் பாதுகாப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட பிராந்திய "AquaLivelihood" திட்டமானது, சார்க் அபிவிருத்தி நிதி (SDF) மற்றும் உறுப்பு நாடுகளின் தேசிய நிறுவனங்களுடன் இணைந்து செவ்வாயன்று (05) கொழும்பில் அதிகாரப்பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த அங்குரார்ப்பண நிகழ்வில், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர், இராமலிங்கம் சந்திரசேகர் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

"நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தியின் மூலம் சார்க் பிராந்தியத்தில் உள்ள சிறு அளவு மீன் வளர்ப்பாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் கிராமப்புற மக்களின் போசாக்குப் பாதுகாப்பை உறுதிசெய்தல்" என்ற தொனிப்பொருளின் கீழ் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்திற்காக 3.97 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளது. பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் உள்ள 120,000க்கும் அதிகமான கிராமியக் குடும்பங்கள் இதன் மூலம் நேரடிப் பயனடைவார்கள்.

இத்திட்டத்தின் கீழ், இலங்கையில் சுமார் 11,000 கிராமிய மீன் வளர்ப்புக் குடும்பங்கள் நேரடிப் பயனடையவுள்ளதுடன், இதற்காக 586,224 அமெரிக்க டொலர்கள் (சுமார் 175 மில்லியன் இலங்கை ரூபா) ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இத்திட்டத்தினை செயல்படுத்தும் பிரதான தேசிய நிறுவனமாக இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA) செயற்படுகின்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர், இராமலிங்கம் சந்திரசேகர் அவர்கள்:

"இன்று நாம் ஆரம்பிப்பது வெறுமனே ஒரு திட்டத்தை அல்ல, ஒரு பயணத்தை. ஆயிரக்கணக்கான சிறிய மீன் வளர்ப்பாளர்களுக்கு உதவும், கிராமப்புறக் குடும்பங்களின் போசாக்கையும் பொருளாதாரத்தையும் வலுப்படுத்தும், நமது பிராந்தியத்தில் உறுதியான பங்காளித்துவத்தைக் கட்டியெழுப்பும் ஒரு பயணம். இத்திட்டத்தின் பயனாளிகளில் குறைந்தபட்சம் 30% பெண்களாக இருப்பது இதன் மிக அழகான அம்சமாகும். இது ஒரு எண்ணிக்கை மட்டுமல்ல, அபிவிருத்தியின் ஒவ்வொரு படியிலும் பெண்கள் வலுவூட்டப்பட வேண்டும் என்ற செய்தியாகும். பொதுவான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, சார்க் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் நாடுகள் ஒன்றிணைந்து, அறிவைப் பகிர்ந்துகொண்டு செயல்பட முடியும் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். இந்தத் திட்டம் இலங்கைக்கும் முழுமையான தெற்காசியாவிற்கும் ஒரு பெரும் வெற்றியைத் தரும் வகையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்."

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளர், கலாநிதி பி.கே. கோலித கமல் ஜினதாச அவர்கள்:

"இந்தத் திட்டத்தின் மூலம், ஆய்வுக்கும் உற்பத்தியாளரின் யதார்த்தத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, இலங்கையில் நிலவும் மீன் குஞ்சுகளின் பற்றாக்குறைக்குத் தீர்வாக, சமூகத்தால் நிர்வகிக்கப்படும் பரவலாக்கப்பட்ட இனப்பெருக்கப் பிரிவுகளை நிறுவுவதும் இதன் மற்றுமொரு முக்கிய நோக்கமாகும். பெண்களை உதவியாளர்களாக மட்டுமன்றி, தீர்மானம் எடுப்பவர்களாகவும், உற்பத்தியாளர்களாகவும், தொழில் முயற்சியாளர்களாகவும் வலுவூட்டுவதன் மூலம், நாம் குடும்பங்களையும் சமூகங்களையும் கட்டியெழுப்ப முடியும். இந்தத் திட்டம், அரசாங்கம், ஆய்வாளர்கள், தனியார் துறை மற்றும் விவசாய சமூகத்தை ஒன்றிணைத்த, பல்வேறு தரப்பினரையும் உள்ளடக்கிய மாதிரியாகும். இதுவே இத்திட்டத்தின் நிலைத்தன்மையை உறுதி செய்யும்."

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர், கித்சிறி தர்மப்பிரிய அவர்கள்:

"நமது நாடுகளில் நன்னீர் மீன்வளர்ப்பில் காணப்படும் முக்கிய பிரச்சினைகளான தரமான மீன் குஞ்சுகளின் தட்டுப்பாடு மற்றும் மீன் தீவனத்திற்கான அதிக செலவு ஆகியவற்றுக்குத் தீர்வு காண்பதே இதன் பிரதான நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், உள்நாட்டில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு குறைந்த செலவிலான மீன் தீவனத்தை உற்பத்தி செய்யவும், இலங்கையின் எட்டு மாவட்டங்களில் மீன் குஞ்சுகளின் உற்பத்தியை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கைக்கு இன்னும் தேவைப்படும் சுமார் 300,000 மெட்ரிக் தொன் மீன் அறுவடையை கடலில் இருந்து மாத்திரம் பெற்றுக்கொள்ள முடியாது.

அந்த இடைவெளியை நிரப்புவதற்கு நன்னீர் மீன்வளர்ப்பை அபிவிருத்தி செய்வது இன்றியமையாதது. இத்திட்டத்தின் மூலம் இலங்கையில் 800-900 குடும்பங்கள் நேரடியாக வறுமையிலிருந்து மீள்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் என நம்புகிறோம். அத்தோடு 30,000க்கும் அதிகமானோருக்கு மறைமுகப் நன்மைகளும் கிடைக்கும்."

# 25 பேரை பலியெடுத்த கென்யா பஸ் விபத்து



கென்யாவில் பஸ் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 25பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கென்யாவின் நியாஹெரா நகரில் இருந்து நியாகாச்சிற்கு சென்று கொண்டிருந்த பஸ் கமேகா நெடுஞ்சாலையில் சென்றபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்ததாலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் 10 பெண்கள் உட்பட 25 பேர் உயிரிழந்துள்ளதாகவும் படுகாயம் அடைந்த 20 பேர்மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்,இவ்விபத்தில் உயிரிழந்தோருக்கு அந்நாட்டின் ஜனாதிபதி வில்லியம் ரூட்டோ இரங்கல் தெரிவித்துள்ளார்.

# யாழ், முஸ்லிம் சமூக ஜோதி விருது 2024



யாழ். முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பால் ஏற்பாட்டில் "யாழ் முஸ்லிம் சமூக ஜோதி" விருது 2024 ஆம் ஆண்டுக்கு யாழ் முஸ்லிம்களில் முதலாவது வணிக பட்டதாரி எம்.ஏ.சி.ஏ.ஸலாம், சமூகப்பற்றுள்ள கல்வியியலாளர் மஹ்றூப் ஏ.காதர், முன்னாள் யாழ் மத்திய கல்லூரி, சிறந்த கிரிக்கெட் வீரர் அபூபக்கர் சுல்தான், கவிஞர் யாழ் அஸீம், முன்னாள் யாழ் முஸ்லிம் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட நட்சத்திர கோல் கீப்பர் எம்.எம்.முனாஸ். ஆகிய ஐவருக்கும் வழங்கப்பட்டது.

யாழ் முஸ்லிம் சமூக ஜோதி விருது 2024 விருதுக்கு எஸ்.எம்.மீரான் ஸாஹிப் பௌண்டேஷன் சார்பாக எம்.எஸ்.ஜாபிர் அவர்கள் அனுசரணை வழங்கினார்.

# களுத்துறை மாவட்டத்தில் ஆர்.ஜே. மீடியா ஏற்பாட்டில் ஊடக செயலமர்வு




( ஐ. ஏ. காதிர் கான் )

ஆர்.ஜே. மீடியா வலையமைப்பு, "முயற்சிக்கு என்றும் முதலிடம்" என்ற நாமத்தை மையமாகக் கொண்டு பல மாவட்டங்களை மையப்படுத்தி தலைமைத்துவம், ஊடகம், மருதாணிக்கலை மற்றும் அடிப்படை ஆங்கிலம் போன்ற பாடத்திட்டங்களை உள்ளடக்கிய தான ஒரு நாள் செயலமர்வுகளை நடத்தி வருகின்றது.

அதன் ஒரு அங்கமாக, அப்பாடத் திட்டங்களை உள்ளடக்கிய ஒரு நாள் இலவச செயலமர்வு, அண்மையில் களுத்துறை மாவட்டத்தை மையப்படுத்தி பேருவளை லெஜெண்ட் கல்லூரியில் இடம்பெற்றது.

நிகழ்வில் வளவாளர்களாக ஆர்.ஜே. மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும் ஊடகப் பயிற்று விப்பாளருமான ஏ. எம். இன்ஷாப், ஆங்கிலத் துறை வளவாளராக அஸ்மி ஜூனைட் மற்றும் மருதாணிக்கலை வளவாளராக இலங்கை கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மாணவியும் ஆர்.ஜே. மீடியாவின் நிகழ்ச்சி முகாமையாளரும் மருதாணிக் கலை பயிற்றுவிப்பாளருமான ஹஷ்மா ஷபீன் போன்றோர் கலந்து கொண்டு விரிவுரைகளை வழங்கியமை சிறப்பம்சமாகும்.

"ஸஸூ" அகடமியின் பணிப்பாளர் பி.எம்.எப். பஸ்லா, பேருவளை லெஜெண்ட் கல்லூரியின் பணிப்பாளர் அஸ்ரி ஆப்தீன், கல்லூரியின் ஆங்கில வளவாளர் பி.எம். ரிம்ஸான் ஆகியோர் அதிதிகளாக பங்கேற்றிருந்த இச்சிறப்பு நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் மாவட்ட பணிப்பாளராக தாலிப் எம் நபீல் நியமனம்




(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க பேரவையின் புத்தளம் மாவட்ட பணிப்பாளராக ஆசிரியர் தாலிப் எம் நபீல் நியமிக்கப்பட்டுள்ளார்

இவருக்கான நியமனம் பேரவையின் தலைமையகத்தில் அதன் தேசிய தலைவர் அம்ஹர் எம் சரீப் இனால் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# விஸ்டம் சர்வதேச பாடசாலையின் வருடாந்த சந்தை நிகழ்வு




(பேருவளை பீ.எம்.முக்தார்)

விஸ்டம் சர்வதேச பாடசாலை தர்கா நகர் கிளையின் வருடாந்த சந்தை ஆரம்ப நிகழ்வு அதிபர் எம்.என்.எம்.மதனி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பேருவளை பிரதேச சபை தலைவர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சந்தை பொருட்கள் விற்பனையை தொடங்கி வைத்தார். விஸ்டம் சர்வதேச பாடசாலையின் முகாமைத்துவ தலைவர் அஷ்செய்க் எம்.எச்.எம்.பௌஸர் ஹூஸைன் (நளீமி), அல்-ஹம்றா மகா வித்தியாலய முன்னாள் அதிபர் எம்.இஸட்.எம்.நயீம், பே-ருவளை பிரதேச சபை உறுப்பினர் புனைப் ஹனீப், பேருவளை எழுத்தாளர் சங்க தலைவர் எம்.ரபீஸ் ஹம்ஸா உட்பட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# புத்தளம் மாநகர சபை மேயர் மற்றும் புத்தளம் காற்பந்தாட்ட லீக் நிர்வாகிகள் சந்திப்பு



(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

புத்தளம் காற்பந்தாட்ட லீக் நிர்வாக குழு உறுப்பினர்கள், புத்தளம் மாநகர சபை மேயர் பொறியியலாளர் எம்.எப்.எம். ரின்ஷாத் அஹ்மதை மாநகர சபை காரியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (03) சந்தித்து எதிர்கால காற்பந்தாட்ட அபிவிருத்திகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

புத்தளம் மாநகர சபையின் பொறுப்பில் இருக்கின்ற புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் காற்பந்து போட்டிகளை நடத்தும்போது எதிர்கொள்ளும் பல்வேறு விதமான சிக்கல்கள் குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக நுழைவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்வதில் ஏற்படுகின்ற இழுபறிகள், விளையாட்டு வீரர்கள் இடைவேளையில் அமைதியாக இருந்து ஓய்வு எடுக்கின்ற இட அமைப்புகள் தொடர்பாகவும் இங்கு விரிவாக ஆராயப்பட்டன.

மேயர் ரின்ஷாத் அஹ்மத் மாநகர சபை மைதானம் மற்றும் இதர தேவைகள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை கூடிய விரைவில் எடுப்பதாக இதன் போது உறுதியளித்தார்.

இதன்போது புத்தளம் காற்பந்தாட்ட லீக்கின் தலைவர் முஹம்மது யமீனினால் புத்தளம் மாநகர சபையின் மேயருக்கு புத்தளம் காற்பந்தாட்ட லீக் சார்பாக நினைவுச்சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது

# சீனன்கோட்டை முத்துக்கள் வட்சப் குழுமத்தின் மாணவர் கௌரவிப்பு நிகழ்வு




(பேருவளை பீ எம் முக்தார்)

பேருவளை சீனன் கோட்டை அல் ஹூமைஸரா தேசிய பாடசாலை மற்றும் நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி ஆகிய இரு பாடசாலைகளிலும் கடந்த க.பொ.சாதாரண தர பரீட்சையில் ஒன்பது ஏ சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு சீனன் கோட்டை முத்துக்கள் வட்ஸ்அப் குழுமத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயற்றுக்கிழமை மர்ஹூம் எம்.எஸ்.எம் பளீல் ஹாஜியாரின் இல்லத்தில் நடைபெற்றது.

குழுமத்தின் தலைவர் ராமிஸ் நாசிம் தலைமையில் இடம்பெற்றது இந்நிகழ்வில் பேருவளை நகர சபை உறுப்பினரும் குழுமத்தின் அங்கத்தவருமான அல்ஹாஜ் அஸாம் பளீல் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக அல் ஹூமைஸரா தேசிய பாடசாலை பிரதி அதிபர் எஸ். முஸம்மில், உப அதிபர் எம்.ரீ.எம் நைஸர், நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பஹீமா பாயிஸ், சீனன் கோட்டை ஸகாத் அமைப்பின் தலைவர் அல் ஹாஜ் எம்.ஐ.எம் பாகிர் மற்றும் இரத்தினக்கல் வர்த்தகர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், குழுமத்தின் ஒழுங்கினைப்பாளர், உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் குழுமத்தின் அங்கத்தவர் ஜே.எம்.எம் முஹம்மத் ஸாலி ஹாஜியார் குழுமத்தின் சமூக, கல்வி மற்றும் பொதுப் பணிகள் குறித்து விளக்கமாக எடுத்துக் கூறியதுடன், இரு பாடசாலை களிலும் 8ஏ பெறுபேறுகளை பெற்றுக் கொண்ட மாணவர் களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டது.

அத்துடன் நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியில் 8ஏ பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கான பணப் பரிசு தொகையை அதிபரிடம் இதன் போது கையளிக்கப்பட்ட மையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# போதை வஸ்த்து பாவித்து பஸ் ஓட்டிச் சென்ற இ.போ.ச பஸ் சாரதி கைது

( ரஷீத் எம். றியாழ்)




போதை வஸ்த்து பாவித்து பஸ் ஓட்டிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபை பஸ் சாரதி ஒருவர் நுவரெலியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா பதுளை பிரதான வீதியிலுள்ள சீத்தாஎளிய எனும் இடத்திலேயே இந்த சாரதி கைது செய்யப்பட்டார்.

திவுலபிட்டிய டிப்பே-ாவுக்குச் சொந்தமான இந்த பஸ் சாரதி தனது ஆசனத்தின் பின்னால் ஒருவகை கசிப்பு வடிவிலான போதைவஸ்த்தை போத்தலில் வைத்து தண்ணீர் குடிப்பது போன்று அருந்தி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

எம்.ஐ.அப்துல் நஸார்

# இஸ்ரேலியர்கள் மத்தியிலான பிளவுகளை மேலும் ஆழப்படுத்தியுள்ள காஸா யுத்தம்

இருபத்தி இரண்டாவது மாதமாக காஸா மீதான யுத்தம் தீவிரமாக இடம்பெற்று வரும் நிலையில், அது நண்பர்களையும் குடும்பங்களையும் ஒருவருக்கொருவரை எதிரும் புதிருமாக மாற்றியுள்ளதோடு ஏலவே காணப்படும் அரசியல் மற்றும் கலாசார பிளவுகளை மேலும் கூர்மைப்படுத்தியுள்ளது.
பணயக்கைதிகள் குடும்பங்களும் சமாதான செயற்பாட்டாளர்களும் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அரசாங்கம் ஹமாஸ்/டன் ஒரு யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும், 2023 ஒக்டோபரில் ஹமாஸ் தாக்குதல்களின் போது கடத்தப்பட்ட மீதமுள்ள கைதிகளை விடுவிக்க வேண்டும் எனவும் விரும்புகின்றனர்.
இதனிடையே, சர்வதேச விமர்சனங்கள் மேலோங்கியுள்ள நிலையிலும், நெதன்யாகுவின் அமைச்சரவையின் வலதுசாரி உறுப்பினர்கள், மேலும் பாலஸ்தீன நிலத்தை ஆக்கிரமித்து இஸ்ரேலுடன் இணைக்க இந்தத் தருணத்தைப் பயன்படுத்த விரும்புகின்றனர்.
இந்த விவாதம் நாட்டைப் பிரித்து, தனிநபர்களுக்கிடையேயான உறவுகளை சீர்குலைத்து, இஸ்ரேலின் மிக நீண்ட கால யுத்தத்திற்கு மத்தியில் அதன் மிகப்பெரிய தேவையாகக் காணப்படுகின்ற தேசிய ஒற்றுமையை குறைமதிப்பிற்கு உட்படுத்தியுள்ளது.
'யுத்தம் தொடர்ந்து நடைபெற்றுவரும் நிலையில், நாம் மேலும் மேலும் பிளவுபடுகிறோம்,' என டெல் அவிவின் டிசென்காப் சதுக்கத்தில் நடந்த சமாதானக் கூட்டத்தில் கலந்து கொண்ட இஸ்ரேலின்



மதம்சார் இடதுசாரியான 29 வயது கவிஞரும், பாடசாலை ஆசிரியரும், சமாதான செயற்பாட்டாளருமான இமானுவேல் யிட்சாக் லெவி தெரிவித்தார்.
'மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை ஆதரிக்கும் ஒருவருக்கு நண்பராகவோ, குடும்பமாகவோ, நல்ல மகனாகவோ, நல்ல சகோதரனாகவோ இருப்பது மிகவும் கடினம்,' என அவர் ஏ.எப்.பி. செய்தி முகவரகத்திற்குத் தெரிவித்தார்.
'நான் எனது சொந்த நாட்டைக் காட்டிக் கொடுத்தேன் என அவர்கள் நினைத்தால், அவர்கள் என்னை ஆதரிப்பதும் கடினம் என நான் நினைக்கிறேன்.' எனவும் அவர் தெரிவித்தார்.
இந்தக் கருத்தை ஆமோதிப்பதுபோல், கூட்டத்திலிருந்த கோபமடைந்த ஒரு உயரமான, கருமையான தலைமுடி கொண்ட சைக்கிள் செலுத்துபவர், தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு, பங்கேற்பாளர்களை நோக்கி 'துரோகிகள்' என்று சத்தமிட்டதோடு, ஹமாஸின் கைக்கூலிகளாக செயற்பாட்டாளர்கள் இருப்பதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.
'யுத்தம் தொடர்ந்து வரும் நிலையில், இந்த யுத்தத்தின் உள் நோக்கங்கள் இராணுவ காரணங்கள் அல்ல, அரசியல் காரணங்கள் என்ற முடிவுக்கு மக்களை வரவழைத்துள்ளது.'
ஜூலை 24 மற்றும் 28 க்கு இடையில் தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவனம் நடத்திய ஒரு கணக்கெடுப் பின்படி, 803 யூதர்கள் மற்றும் 151 அரேபியர்கள் பதிலளித்தார்கள், பணயக்கைதிகளை விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதத்திற்கு ஹமாஸ் தான் முக்கிய காரணம் என இஸ்ரேலியர்கள் பதிலளித்தனர்.
காஸாவில் நிலவுகின்ற மனிதாபிமான த்திற்கு எதிரான சூழ்நிலையால் இஸ்ரேலிய யூதர்களில் 24 சதவீதம் பேர் 'துயரத்தில்' உள்ளனர் அல்லது 'மிகவும் துயரத்தில்' உள்ளனர் – ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கைகளின் படி, 'பஞ்சம் பரவி வருகிறது' மற்றும் பாலஸ்தீன பொதுமக்கள் பெரும்பாலும் உணவு தேடும் போது கொல்லப்படுகிறார்கள் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஆனால் இஸ்ரேலிய பணயக் கைதிகளின் குடும்பங்களுக்கு இஸ்ரேலில் ஆதரவு காணப்படுகிறது, அவர்களுள் பலர் நெதன்யாகு தனது சொந்த அரசியல் நிலைப்பாட்டை வலுப்படுத்துவதற்காகவே செயற்கையாக யுத்தத்தை நீடிப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர்.
'இஸ்ரேலில் கட்டாய இராணுவ சேவை உள்ளது,' என இட்ஸ் டைம் கூட்டமைப்பின் எழுத்தாளரும் சமாதான செயற்பாட்டாளருமான 50 வயதான மிகா அல்மோக் தெரிவித்தார்

# மாத்தளையில் 36 வருட சேவையிலிருந்து ஓய்வு பெறும் அதிபருக்கு கௌரவம்

(ரஷீத் எம்.றியாழ்)

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த மாத்தளை நிக்கொள்ள மின்ஹாஜ் மகா வித்தியாலய பிரதி அதிபர் கே.எம். அப்துஸ் ஸமது 36 வருட சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு கௌரவிக்கப்பட்டார்.
இந்நிகழ்வு மின்ஹாஜ் மகா வித்தியாலய அதிபர் எம்.எஸ். எம். பாஸில் தலைமையில் நேற்று முன்தினம் (7) நடைபெற்றது. மாத்தளை கல்வி வலயத்தின் முஸ்லிம் பாடசாலைகளுக்குப் பொறுப்பான இணைப்பதிகாரி எம். ஆர் யு .றிழ்வான் இவ் விழாவுக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.
மாத்தளை கல்வி வலய வளவாளர் ஹமீத் அகில் உட்பட முன்னாள்





அதிபர்கள் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கப் பிரமுகர்கள் மஸ்ஜித் நிருவாகிகள், சமூகநல இயக்க பிரமுகர்கள், பலரும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தனர்.
மின்ஹாஜ் மகா வித்தியாலய மாணவர்களின் பெறுபேற்றை அதிகரிக்கும் முயற்சிகளில் அதிக அக்கறை செலுத்தியவர் என்றும் மாணவர்களுக்கு பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளில் வலய , மாகாண, தேசிய மட்டத்தில் பரிசுகளை பெற்றுக் கொடுப்பதிலும் இவர் அரும்பாடு பட்டுள்ளார் என்றும் இதே பாடசாலையில் கற்று பல்கலைக்கழகத்திற்கு சென்ற முதல் ஆண் மாணவரும் அதிபர் அப்துல் சமது ஆவார் என்றும் இவ்விழாவில் பேசப்பட்டது.
இந்நிகழ்வில் பல்வேறு கலை கலாசார நிகழ்ச்சிகளும் மேடையேற்றப்பட்டன.

# நுவரெலியா பிரதேச சபையின் (நானுஓயா) புதிய செயலாளர் தனது கடமைகளை பொறுப்பு..!

நுவரெலியா பிரதேச சபையின் (நானுஓயா) புதிய செயலாளராக முஹம்மத் சியாத் சுல்தான் இன்று (07) தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.
இவர் தெல்தோட்டை பிரதேசத்திற்குட்பட்ட மெடிஹென எனும் கிராமத்தின் திரு. முஹம்மது சுல்தான் மற்றும் திருமதி சித்தி மர்லியா தம்பதிகளின் மகனாவார்.
கண்டி எனசல்கொல்ல மத்திய கல்லூரியில் தனது உயர் கல்வியை தொடர்ந்த இவர், பல்வேறு அரச நிறுவனங்களின் முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.
மத்திய மாகாண சபையின் பிரதான மற்றும் கல்வி அமைச்சில் சேவையாற்றி மத்திய மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு தனது உயர்ந்த பட்ச சேவையை வழங்கியிருந்தார். பின்னர்



கம்பளை கல்விப் பணி மனையிலும் ஒரு சில மாதம் ஆசிரியராகவும் பணியாற்றினார்.
இறுதியாக இலங்கை பாராளுமன்றத்தில் பணியாற்றியிருந்தார்.
கடந்த 01ம் திகதி நுரெலிய பிரதேச சபையின் (நானுஓயா) செயலாளர் பதவிக்கான நியமனக் கடிதத்தை மத்திய மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

# சிறப்பாக நடைபெற்ற ஹஜ் உம்ரா வழிகாட்டி நூல் வெளியீட்டு விழாவும் மாணவர் கௌரவிப்பு நிகழ்வும்



**(பேருவலை பீ.எம்.முக்தார்)**

தர்கா நகரைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளரும் எழுத்தாளருமான தேசபந்து ஸ/ஹைர் ஹாஜியார் எழுதிய ஹஜ் உம்ரா வழிகாட்டி நூல் வெளியீட்டு விழாவும், தர்கா நகர் இஸ்லாமிய நலம்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டிலான மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் தர்கா நகர் ஸாஹிரா கல்லூரி நளீம் ஹாஜியார் மண்டபத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது.

தர்கா நகர் அல்ஹம்ரா மகா வித்தியாலயம், ஸாஹிரா ஆரம்பப் பாடசாலை மற்றும் அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளிலும் கடந்த 2024 வருடம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் நூற்றுக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் இந்த நிகழ்வில் கௌரவித்து பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிகழ்வுக்கு தேசிய நல்லிணக்க பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததோடு கௌரவ அதிதிகளாக களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பேருவளை அபிவிருத்திக் குழு தலைவருமான சந்திம ஹெட்டியாராச்சி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். எம் அஸ்லம் ஹாஜியார், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.எம். எம் அம்ஜத் ஹாஜியார், முன்னாள் தேசிய மருந்தாக்கக் கூட்டுத்தாபன தலைவர் கலாநிதி ஷரூமி ஹாசிம், தேசிய மக்கள் சக்தி களுத்தறை மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர் அஷ்ரூஸ் அஸாத் ஆகியோர் பங்குபற்றினர்.

அத்தோடு விசேட அதிதிகள், பிரதேச சபை உறுப்பினர்கள், வானொலி கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர், பெற்றோர்கள் நலம் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

பேருவளை பிராந்திய எழுத்தாளர் சங்க செயலாளர் பஸ்லி ஹமீட் நூல் விமர்சனம் செய்ததோடு பிரபல தொழிலதிபர் அம்ஜாத் டிரவல்ஸ் உரிமையாளர் அல் ஹாஜ் எச்.எம் அம்ஜதீன் நூலின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது

## பிளாஸ்டிக்குகளை சேகரிக்கும் வேலைத்திட்டம்



**(கிண்ணியா நிருபர்)**

கிண்ணியா நகர சபை எல்லையில் வீசப்படுகின்ற பிளாஸ்டிக்குகளை சேகரிப்பதற்கான வேலை திட்டம் ( 5) நகர சபையின் தவிசாளர் எம். எம். மஹ்தி அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

நகர சபை பிரதேசத்தில் கழிவுகளாக வீசப்படுகின்ற பிளாஸ்டிக் பாத்திரங்களால் சுற்றுச்சூழல் மாசடைதல், நுளம்புகள் வளர்தல் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்கின்ற நோக்கத்தில் முக்கியமான இடங்களில் பிளாஸ்டிக்குகளை சேகரிக்கின்ற கொள்கலன்கள் வைக்கப்பட்டுள்ளன.

எனவே எம்மால் வீசப்படுகின்ற அனைத்து பிளாஸ்டிக்களையும் குறிப்பிட்ட கொள்கலன்களில் சேகரிப்பதன் மூலம் அக்கழிவுகளை மீள்சுழற்சி செய்து பயன்பெறு முகமாக அனைவரும் பிளாஸ்டிக் கழிவுகளை கொள்கலன்களில் இட்டு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைத்து பொது மக்களையும் நகர சபை கேட்டுக்கொள்கிறது.

இந்நிகழ்வில் சபையின் கௌரவ உறுப்பினர் அஜீஸா, என். ஆர். சி நிறுவனத்தின் உறுப்பினர் யசோதா, சபையின் செயலாளர், உத்தியோகத்தர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள், பொது மக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




மாவனல்லை அழகு கலை நிபுணர் எம்.ஆர்.ரினோஸா ஆசிரியை அவர்களிடம் அழகு கலை கற்கை நெறியை கற்று பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மாவனல்லை இல்மா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் மாவனல்லை பிரதேச செயலக செயலாளர் வி.ஓ.எல் ரத்னசேகர பிரதம அதிதியாகவும், மாவனல்லை பிரதேச சபை உறுப்பினர் அன்ஷாப் நஸீர் மற்றும் ஓய்வு பெற்ற ஸாஹிரா தேசிய கல்லூரி அதிபர் ஹஸனா ஸாலி ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்து சான்றிதழ் வழங்கி சிறப்பித்ததை படத்தில் காணலாம்.

**படம்: பாரா தாஹீர் மாவனல்லை**

## ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி முன்னெடுப்புக்களுக்கு பிரதேச சபை உறுப்பினர் பாராட்டு

**(எஸ்.எம்.எம்.முர்ஷித்)**

ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவின் அபிவிருத்தியில் அதீத அக்கரையோடு கால நேரமின்றி பணியாற்றி வரும் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் முன்னெடுப்புக்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதாக கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினரும் சமூகச் செயற்பாட்டாளருமான எம்.எஸ்.எம்.ஹலாதீன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது கடந்த மாதம் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தலைமையில் இடம்பெற்ற மாவட்டத்தின்



எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கான மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச்செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில், ஓட்டமாவடி பிரதேச செயலகத்தினால் பிரதேச நன்மைகருதி பல்வேறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

அதிலும் குறிப்பாக, பிரதேச கைத்தொழிலாளர்களின் நன்மைகருதியும் தொழில் நிலையங்களால் பாதிக்கப்படும் பொதுமக்களின் நன்மைகருதியும் அரிசி ஆலை, மர ஆலை மற்றும் தொழில்பேட்டை அமைக்க 70 ஏக்கர் காணிக்கான கோரிக்கை விடுக்கப்பட்டு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளமை பிரதேசத்திற்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

அத்துடன், பிரதேசத்தில் ஆற்றரிப்பினால் ஏற்படும் பாதிப்புக்களைத் தடுப்பதற்காக அணைக்கட்டு, ஓட்டமாவடி மணிக்கூட்டுக் கோபுர சந்தி மற்றும் சாவனாட்டு சந்தி என்பவற்றுக்கான வீதி சமிக்சை, காவத்தமுனை வட்டாத்திமுனை பாலம் என பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பில் முன்வைக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளுக்கும் முன்னெடுப்புக்களும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என பிரதேச சபை உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மாவனல்லை ஆயிஷா உயர் கல்வி நிறுவனத்தின் வெள்ளி விழா

**(பாரா தாஹீர் மாவனல்லை)**




மாவனல்லை ஆயிஷா உயர் கல்வி நிறுவனம் தனது வெள்ளி விழாவை ஆயிஷா கலையகத்தில் கொண்டாடவுள்ளது. 25 ஆவது ஆண்டு, தனது கல்விப் பயணத்தை சிறப்பாக நிறைவு செய்துள்ளதை முன்னிட்டு இக் கல்லூரி "அருள் மிகு குடும்பம் இன்பம் நிறைந்த இல்லம் "எனும் தொனிப் பொருளில் ஆகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை நாடு தழுவிய குடும்பம் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

ஆயிஷா கல்லூரியின் வரலாறு மற்றும் தாய்மை விருத்தி, இஸ்லாமிய குடும்பத்தின் நோக்கங்கள், திருமண வாழ்க்கை, பெற்றோரியம், குழந்தைகளின் வளர்ச்சியும் விருத்தியும், நவீன குடும்பம் சவால்கள், இஸ்லாமிய வீடு, இஸ்லாமிய இல்லம் ஆகிய எட்டு பிரதான பகுதிகளை உள்ளடக்கிய கண்காட்சி ஆனது இஸ்லாமிய குடும்ப வாழ்க்கை பற்றிய விழிப்புணர்வுவை சமூகத்தில் ஏற்படுத்துவதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். சிறப்புமிக்க இந்த நாடளாவிய கண்காட்சியை கண்டு களித்து பயன் பெறுமாறு ஆயிஷா நிர்வாகம் அனைவரையும் அன்போடு அழைக்கிறது.




அனுராதபுரம் சாஹிரா கல்லூரியில் இருந்து கடந்த 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலய அதிபர் ஜே.ஏ.அசாத் மொஹமட் தலைமையில் (04) நடைபெற்றது. இதன்போது அதிபர் , அதிதிகள் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்த போது பிடிக்கப்பட்ட படங்கள்.

**(படங்கள்:- எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம் )**

# காத்தான்குடி மீடியா போரத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டமும் புதிய நிருவாக சபை தெரிவும்





(எம்.ஐ.அப்துல் நஸார்)

காத்தான்குடி மீடியா போரத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை (02) காத்தான் குடி மீடியா போரத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.நூர்தீன் தலைமையில் காத்தான்குடி மீடியா போரத்தின் உறுப்பினர் ஏ.எல்.டீன் பைரூஸ் அவர்களது இல்லத்தில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தின் பிரதம அதிதியாகவும் நிருவாகத் தெரிவின் கண்காணிப்பாளராகவும் காத்தான்குடி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா காத்தான்குடி கிளையின் செயலாளருமான அஷ்ஷெய்க் எம்.ஐ.எம்.ஜவாஹிர் (பலாஹி) கலந்து கொண்டார்.

இதன்போது, காத்தான்குடி மீடியா போரத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.நூர்தீன், போரத்தின் ஆயுட்காலத் தலைவர் மௌலவி எஸ்.எம்.எம்.முஸ்தபா (பலாஹி), கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம்.ஜவாஹிர் (பலாஹி) ஆகியோரது உரைகளும் மற்றும் சபையோரின் கருத்துரைகளும் இடம்பெற்றன.

இதனையடுத்து போரத்தின் ஆயுட்காலத் தலைவர் மௌலவி எஸ்.எம்.எம்.முஸ்தபா (பலாஹி), கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம்.ஜவாஹிர் (பலாஹி) ஆகியோரது நெறிப்படுத்தலின் கீழ் நிருவாகத் தெரிவு இடம்பெற்றது.

தலைவராக எம்.எஸ்.எம்.நூர்தீன், செயலாளராக எம்.ஐ.அப்துல் நஸார், பொருளாளராக எம்.எப்.எம்.பஸால் ஜிப்ரி, உப தலைவர்களாக எஸ்.ஏ.கே. பழீலுர்ரஹ்மான், எம்.எஸ்.எம்.சஜி, உப செயலாளராக ஏ.எல்.ஆதிப் அஹமட், தகவல் பணிப்பாளராக எம்.எஸ்.சஜித் அஹமட், ஊடக இணைப்பாளராக ஜே.எம்.பஹத், சமூக நலன்புரி பிரிவின் பணிப்பாளராக ஏ.எல்.டீன் பைரூஸ், கலை, இலக்கியப் பிரிவின் பணிப்பாளரான எம்.ரீ.எம்.யூனுஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதோடு போரத்தின் நிருவாக சபை உறுப்பினர்களாக கபீர் எம் ஹஸன், மௌலவி என்.எம்.எம்.நௌபர் (பலாஹி), பீ.எம்.பயாஸ், ஏ.ரீ.எம்.றியாஸ், எம்.எம்.எம்.அஸீம், எம்.ஐ.அப்துல் மஜீட் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதியாக காத்தான்குடி மீடியா போரத்தின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் ஊடகவியலாளர்கள் மத்தியில் ஒற்றுமையின் அவசியம் தொடர்பான புதிய தலைவரின் உரையுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன.

இந் நிகழ்வில் போரத்தின் கடந்த வருட செயற்பாடுகள் தொடர்பான அறிக்கை செயலாளரினாலும் கடந்த வருட கணக்கறிக்கை பொருளாளரினாலும் வாசிக்கப்பட்டு அவற்றின் பிரதிகள் உத்தியோகபூர்வமாக கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம்.ஜவாஹிர் (பலாஹி) அவர்களிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இரத்தான முகாம்




(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் நிலவும் குருத்தித்தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் வகையில் கோறளைப் பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் "உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்" எனும் தொனிப் பொருளில் இரத்ததான முகாம் நேற்று (06.08.2025) புதன்கிழமை இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இரத்ததான முகாமில் வாழைச்சேனை ஆதார வைத்திய சாலையின் வைத்தியர் டாக்டர் எஸ்.விருஷ் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டதுடன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், சமூக செயற்பாட்டாளர் என பலர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

# அனுராதபுரம் சாஹிரா கல்லூரி மாணவி மாகாண மட்டத்தில் முதலிடம்

(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)



அனுராதபுரம் சாஹிரா கல்லூரியில் இருந்து மாகாண மட்டத்தில் நடைபெற்ற தமிழ் மொழிதின போட்டி நிகழ்ச்சியில் ஆர்.ஷிம்லா என்ற மாணவி பிரிவு 03 ல் பேச்சுப் போட்டி நிகழ்ச்சியில் பங்கு பற்றி முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார் .

இதன் மூலம் மாணவியின் திறமை உறுதி மற்றும் மொழிப் பேச்சு திறமை வெளிப்பட்டுள்ளது.

இதற்காக மாணவியை வழிநடத்திய அதிபர் ஜே.ஏ.அசாத் மொஹமட் மற்றும் ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன். இம்மாணவி அனுராதபுரம் விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று கொடுக்கும் ஆசிரியை றமீஸ் நிஷா தம்பதிகளின் புதல்வியாவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மட்/மம/அல் ஹிறா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற தொழிநுட்ப உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு





(எம்.பஹத் ஜுனைட்)

காத்தான்குடி மட்/மம/அல் ஹிறா மகா வித்தியாலயத்தின் 1988 க.பொ.த (சா/த) பழைய மாணவர்களினால் பாடசாலை மாணவர்களின் கல்வி மட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் 10 மடிக் கணினிகள் மற்றும் தொழிநுட்ப உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை( 07) பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.பீ.எம்.றபீக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் காத்தான்குடி நகரசபை தவிசாளர் எச்.எச்.எம்.அஸ்பர் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் கே.எல்.எம்.ஜே .அறபாத், முன்னாள் செயலாளர் எம்.எச்.எம். அன்வர் மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களான ஏ.எல்.கரீம், ஏ.எல்.ஏ.அஸீஸ், பழைய மாணவர் சங்க செயலாளர் ஏ.ஆர்.சப்ரி ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு மாணவர்களுக்கான மடிக்கணினிகள் மற்றும் தொழிநுட்ப உபகரணங்கள் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலையின் 1988 க.பொ.த (சா/த) பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பிரமுகர்கள் என பலரும் க லந்துகொண்டு சிறப்பித்தனர்.

# கொழும்பு மா நகர சபையின் நிலையியற் குழுத் தலைவராக கலீலுர் ரஹ்மான்



கொழும்பு மாநகர சபையின் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான நிலையியற் குழுவின் தலைவராக ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் ஸ்தாபகரும் செயலாளருமான முன்னாள் மாநகர சபை உறுப்பினர் கலீலுர் ரஹ்மான் தெரிவு செய்யப்பட்டார்.

இக்குழுவில், ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் உறுப்பினர் உட்பட குழிவின் மற்றைய ஏனைய உறுப்பினராக தேசிய மக்கள் சக்கியின் உறுப்பினர், பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கை முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் சுயேட்சைக் குழு உறுப்பினர்கள் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்குழுவில் எதிர்க்கட்சி உறுப்பினர்களை அதிகம் நியமித்தன் மூலம் தேசிய மக்கள் சக்தி நல்லாட்சி, முன்மாதியான அரசியல் கலாச்சாரத்தை உருவாக்கி ள்ளது.

வாக்களிப்பின் அடிப்படையி லேயே பெரும்பான்மை வாக்குகளை பெற்று கலீலுர் ரஹ்மான் நிலைக்குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் துறூவி, ரவீந்திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் அனாஸ், சுயேட்சைக்குழு உறுப்பினர் இமல்ஸ ஆகியோர் வாக்களித்தனர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் மஹேஷிகா வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



அரபாத் பஹுர்தீன்

# வெல்லாலகேயின் ப்ளூஸ் அணியை வீழ்த்தியது அசலங்கவின் க்ரேஸ் அணி

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இலங்கை வீரர்களுக்கான ரி20 லீக் தொடரின் 2ஆவது லீக் போட்டியில் க்ரேஸ் அணி, 24 ஓட்டங்களால் பளூஸ் அணியை வீழ்த்தியது.

கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் வெள்ளிக்கிழமை (8) இடம்பெற்ற தொடரின் 2ஆவது லீக் போட்டியில் சரித் அசலங்க தலைமையிலான க்ரேஸ் அணியும், துனித் வெல்லாலகே தலைமையிலான ப்ளூஸ் அணியும் மோதியது.

இப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ப்ளூஸ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதற்கமைய முதலில் துடுப்பாடிய க்ரேஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் நுவனிந்து பெர்ணான்டோ ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களையும், சரித் அசலங்க 59 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் தனஞ்சய, அகில மற்றும் மதீஷ ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் கைப்பற்றினர்.

பின்னர் 193 ஓட்டங்கள் என்ற சவால்மிக்க வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பாடிய ப்ளூஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 168 ஓட்டங்களை மட்டுமே பெற்று 24 ஓட்டங்களால் தமது இரண்டாவது தோல்வியை சந்தித்தது. துடுப்பாட்டத்தில் விசேன் ஹலம்பகே 35 ஓட்டங்களையும், குசல் பெரேரா 33 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இசேன் மாலிங்க 4 விக்கெட்டுக்களையும், பினுர 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ஹைதர் அலி இங்கிலாந்தில் கைது



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் இளம் துடுப்பாட்ட வீரர் ஹைதர் அலி, இங்கிலாந்தில் குற்றவியல் விசாரணை தொடர்பாக மான்செஸ்டர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் பாகிஸ்தான் ஷஹீன்ஸ் அணியின் இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின் போது கடந்த ஜூலை 23 ஆம் திகதி மான்செஸ்டரில் உள்ள ஒரு இடத்தில் நடந்ததாக கூறப்படும் பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டு தொடர்பானது என்று கிரேட்டர் மான்செஸ்டர் பொலிஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்ட அறிக்கையில், 24 வயதான ஹைதர் அலி தொடர்பான குற்றவியல் விசாரணை குறித்து தங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த சம்பவம் ஜூலை 17 முதல் ஓகஸ்ட் 6 வரை நடைபெற்ற பாகிஸ்தான் ஷஹீன்ஸ் அணியின் இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின் போது நிகழ்ந்ததாகவும் கூறியுள்ளது.

பெக்கன்ஹாம் மைதானத்தில் ஷஹீன்ஸ் அணி விளையாடிக் கொண்டிருந்தபோது ஹைதர் கைது செய்யப்பட்ட தாகவும், அவரது கடவுச்சீட்டு பறிமுதல் செய்யப்பட்டு, தற்போது பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஹைதர் அலிக்கு சட்ட ஆதரவு வழங்குவதாகவும், இங்கிலாந்து சட்ட நடைமுறைகளை முழுமையாக மதிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதனால், விசாரணை முடியும் வரை ஹைதர் அலியை தற்காலிகமாக இடைநீக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

"விசாரணை முடிவடைந்து அனைத்து உண்மைகளும் உறுதிப்படுத்தப்பட்ட பிறகு, நடத்தை விதிகளின் கீழ் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தமது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிரேட்டர் மான்செஸ்டர் பொலிஸாரின் அறிக்கையின்படி, "ஓகஸ்ட் 4 ஆம் திகதி பாலியல் வன்கொடுமை குறித்த முறைப்பாடு பெறப்பட்டதை அடுத்து, 24 வயதுடைய ஒருவரை கைது செய்துள்ளோம். இந்த சம்பவம் ஜூலை 23 ஆம் திகதி மான்செஸ்டரில் நடந்ததாக கூறப்படுகிறது. கைது செய்யப்பட்டவர் தற்போது பிணையில் உள்ளார், மேலும் பாதிக்கப்பட்டவருக்கு அதிகாரிகள் ஆதரவு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மொஹமட் தில்ஹாம் மீது விதிக்கப்பட்ட அபராதம் குறித்து

## இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனம் விளக்கம்




இலங்கை தேசிய கால்பந்து வீரர் மொஹமட் தில்ஹாம் மீது விதிக்கப்பட்ட அபராதம் தொடர்பில் இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனம் (குகுளூடு)கடந்த 7ஆம் திகதி உத்தியோகபூர்வ விளக்கமொன்றை வெளியிட்டது.

ஆசிய உதைப்பந்தாட்ட சம்மேளனம் (AFC) சார்பில், கடந்த ஜூன் மாதத்தில் இடம்பெற்ற போட்டியைத் தொடர்ந்து "பலஸ்தீனத்திற்கு சுதந்திரம் வேண்டுகிறோம்." என எழுதப்பட்ட உடை காட்டியதற்காக, தில்ஹாம் மீது அமெரிக்க டொலர் 2,000 அபராதம் விதிக்கப்பட்டது.

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் விளக்கத்தில், சில சமூக ஊடகங்களில் பரவி வரும் போலியான தகவல்களை மறுத்து, இந்த அபராதத்தை சர்வதேச உதைப்பந்தாட்ட சம்மேளனமான குஐகுயு விதிக்கவில்லை எனவும் அதனை ஆசிய உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் சுயாதீன அனுஷாசன மற்றும் நெறிமுறை குழு விதித்தது என்பதை தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த சம்பவம், கடந்த ஜூன் 10ஆம் திகதி கொழும்பு ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற சீன தைவான் அணிக்கு எதிரான 3:1என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி அடைந்ததற்குப் பிறகு, கட்டுப்பாடுகளுடன் ஆன பகுதியில் நடைபெற்றது.

தில்ஹாம், அந்தப் போட்டியில் பயன்படுத்தப்படாத மாற்று வீரராக இருந்தும், போட்டிக்குப் பின் கொண்டாடும் வேளையில் தனது உடையினுள் இருந்த "PRAY FOR FREE PALESTINE" எனும் வாசகம் கொண்ட சட்டையை வெளிக்காட்டினார்.

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தகவலின்படி, இது ஆசிய உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் உபகரண விதிமுறை பிரிவு 3.2.2-ஐ மீறுவதாகும். இந்த விதி, அரசியல், மதம், தனிப்பட்ட மற்றும் சர்ச்சைக்குரிய செய்திகள் கொண்ட உடைகள் அல்லது பொருட்களை போட்டி மையங்களில் அணிவதைத் தடை செய்கிறது.

இது செய்தி உள்ளடக்கத்தின் அடிப்படையில் அல்ல, விதிமீறலின் அடிப்படையில் வழங்கப்பட்ட அபராதம் என குகுளூடு வலியுறுத்தியுள்ளது.

தில்ஹாம் விளக்கம் அளித்ததை அடுத்து, AFC இதனை பரிசீலித்து அபராதத் தொகையை குறைத்துள்ளதாகவும், அந்த அபராதம் செலுத்த 1 மாத அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் அரசியல் நோக்கில் நடத்தப்பட்டது என கூறப்படுவது தவறானது எனவும், ஆட்டத்தின் ஒழுக்கம், நெறிமுறை மற்றும் நடுநிலைத்தன்மையை பாதுகாப்பதற்கான தங்கள் உறுதியை குகுளூடு மீண்டும் உறுதியளித்துள்ளது.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பாக தவறான விளக்கங்கள் வழங்கப்படும் பட்சத்தில், பொது மக்களின் புரிதல் பாதிக்கப்படக்கூடும் என எச்சரிக்கவும் செய்துள்ளது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.